தனிப் பிரதி விலை அணா 0—1—6.
Reg. No. M. 3066. 1936-பிப்ரவரி 1.
PAHUTHARIVU ("REASON")
(இதழ் 10.)

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் கிரமத்து வெளிவருவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ.	1—0—0.	வெளி நாடு ரூ.	1—8—0.
தனிப்பிரதி	0—1—6.	தனிப்பிரதி	0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலை மாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

மதமொழிப்பு, பாட்டு (சாமி. சிதம்பரனார்.) 1
நமக்கு இன்னும் மதம் தேவையா? (கே. எஸ். ராதன்) 3
இறந்தவர் திரும்பி வருவாரா? (S. சிவப்பிரகாசம்.) 9
மதத்தால் சுஞ்சிக்கு வழியுண்டா? (சாமி. சிதம்பரனார்) 13
சாவும் பின் நிகழ்ச்சியும் (டாக்டர் R. P. பாஞ்சிபை.) 18
ருஷியரின் உல்லாச வாழ்க்கை (சோமூர், அஜீஸ்.) 24
கடவுளும் மந்திரமும் மெய்யா, பொய்யா? (ப. ஜகந்நாதன்) 30
சனாதன மதக் கடவுளின் ஆட்சி (குமாரசாமி) 33
காட்சிதனை (ஜே. பி கிருஷ்ணன்.) ... 38
சங்கீதத்தாலும், காட்டியத்தாலும் எற்படும் தீமை (டாக்டர் தோழர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார்) 44
எது மாமிசம்! எது ஜீவகாருண்யம்! (கா. வேலாயுதம்) 48
மறந்துவிடாதீர்கள் 51
மதப்பத்திரிகைகளுக்கு ஒரு வார்த்தை. (கனகராஜன்) 61

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியிடு,

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 1. } ஈரோடு. 1936 பிப்ரவரி 1 { இதழ் 10.

மதமொழிப்பு.

(சாமி. சிதம்பரனார்.)

("கற்பிற் சிறந்த என்றன் கனியே" என்பது போல.)

பல்லவி.

அன்பைச் சிதைத்த கெட்ட மதமே! இலையிதமே!
உன்றன்பதமே இனி அதமே! (அன்பை)

அனுபல்லவி.

கற்பனை மொழிதனில் கருத்தழிந்தனரே!
காணும் உருவையெல்லாம் கடவுளென்றனரே!
அற்புதம் பல நம்பி அறிவிழந்தனரே!
அந்தமதமும் இனிப்போதும்! அதை மோதும்!
அறிவோதும்! இலைதீதும்! (அன்பை)

சரணம்.

1. மோட்ச நரகமென்று முடிந்து வைத்தாரே!
மூடர்கள் இவைதம்மால் முதலிழந்தனரே!
காட்சி நிறையுலகில் கவலையுற்றாரே!
கண்டறிந்தனம் உண்மை காமே இனிப்போமே!
மதம்தாமே! சுகம் ஆமே! (அன்பை)

2. மறுமைப்பிறவியில் மயக்கம் உற்றாரே!
மாநிலத்தில் இதனால் மகிழ்ச்சி கெட்டாரே!
அருமைச் சமத்துவம் அழிக்கவுற்றாரே!
அந்த வஞ்சகம் பலிக்காது! புவிமீது
மதம்தீது! உதவாது! (அன்பை)

3. பண்ணும் அருஞ்செயல்கள் பகுத்தறிவாலே;
பாவ புண்யமொழியே பயஞ்செய்தாலே
உண்ணும் பொருள் இடமும் உடையிழந்தாரே
உற்ற துயரம் முற்றுந்தீரும்! உண்மை தேரும்!
இதைப்பாரும்! நன்மை சேரும்! (அன்பை)

4. பொன்னில் அழுக்கையிட்டுப் புனைதப்பதுபோல
போதனைப் பொய்யுரையால் புவியினில் மேலே
உன்னும் அறிவுதன்னை ஒளித்தனர்தாமே!
உள்ள மதங்கள் செத்துப்போகும்! துன்பம் ஏகும்!
நலமாகும்! உயர்வாகும்! (அன்பை)

பெண்களைக் கண்ணியமாக நடத்தும் தேசத்தை யே தற்கால உலகம் போற்றுகின்றது. கிரியாம்சையில் எதுவும் செய்து காட்டாது, வாய்வேதாந்தம் பேசும் ஜனங்களை தற்கால உலகம் மதிக்கவும் செய்யாது.

மேயோ.

நமக்கு இன்னும் மதம் தேவையா?

சென்னை, கே. எஸ். காதன்

DO WE STILL REQUIRE RELIGION?

நமக்கு இன்னும் மதம் தேவையா? என்ற இந்த பிரச்னையை ஆராயவேண்டிய சமயம் மிகவும் நெருங்கி விட்டதெனக்கூறல் மிகையாகாது. இன்று நமது நாட்டில் குடிகொண்டுவரும் பலவகைப்பட்ட சீர்திருத்தங்களுள், தீண்டாமை என்னும் ஒருவித உணர்ச்சியானது அதிகரிக்கப்பட்டிருக்கும் இக்காலையில் உண்மையை உணருதல் மிக மிக அவசியமாகும். ஒரு மரமானது, தன்னிடத்தில் எத்தனையோ அழகிய வர்ணங்களையுடைய பழங்களைக்காய்ப்பினும், அப்பழங்கள் மனித வருக்கத்திற்கு உண்ண தகுதியற்றவைகளாய்—இன்னும்தீமையையே விளைவிப்பதென்றால் அப்பழங்களை நாம் வெறுப்பதா? அப்பழங்களைக் காய்க்கச் செய்யும் மரத்தை அடியோடு வேரறுத்துவிட்டு, குழிதோண்டிப்புதைப்பதுடன் வேறு பயனுள்ள வேறு ஒரு செடியையும் நடுதல் அவசியமாகும். இதுவே அறிவுடைய செய்கையுமாகும். இதைப் போன்றே இன்று 'இந்துமதம்' என்னும் பெருத்த மரத்தின் கிளைகளில் 'தீண்டாமை' என்னும் கனிகள் காய்த்துக்கிடக்கின்றன. இப்பழங்களுள் நிறைந்திருக்கும் சுளைகளெல்லாம் முழுதும் விஷத் தன்மையையுடையதாகும். இச்சமயத்தில் இந்த தீண்டாமை என்கிற கனிகளை நாம் பறித்து விடுவதா? அல்லது அக்கனிகளை காய்க்கச் செய்யும் 'இந்துமதம்' என்னும் பெரும்மரத்தை வேரறுத்துகுழிதோண்டிப்புதைப்பதா? என்ற ஐயப்பாடு உண்டாகிறது. இதற்கும் நாம் முன் காட்டின உதாரணத்தைப் போல் செய்தல் சமயோசிதமும்—உசிதமுமாகும். இந்த வகையில் தான் இன்று நமது மதங்களும், அதன் தத்துவங்களும், மற்று எனைய பழக்கவழக்கங்களும் காணக்கிடக்கின்றன. இச்சந்தர்ப்பத்தில் நமது தோழர் ச. வெ. ரா. நிகழ்த்தின சொற்பொழிவுகளின் ஒன்றில் குறிப்பிட்டுள்ள ஒரு சிறு அறிவுடமை உதாரணம் நமது ஞாபத்திற்கு வருகின்கிறது. ஒரு கிணறு நிறைய வெள்ளமிருக்கின்

றது. ஆனால் அது மனிதர்கட்குக் குடிப்பதற்கு பிரயோஜனப் படுவதில்லை. அந்தக்கிணற்றிலுள்ள வெள்ளத்தை வெளிப் படுத்தி அதை புதுப்பிக்கவேண்டிய முயற்சிகள் எடுத்தோம். இன்னும் சுத்தப்படவில்லை. இன்னும் அதே கிணற்றில் ஜலக் கிருமிகளை கொல்லவல்ல ஜல ஔடதங்களை ஊற்றி னோம். தண்ணீர் சுத்தமடைந்தபாடில்லை. இந்தப்பாழும் கிணற்றை வைத்துக்கொண்டு நாம் எத்தனை காட்களுக்குத் தான் குடிக்கசுத்த ஜலமின்றித் தவிப்பது?

இத்தறுவாயில் இப்பாழும் கிணற்றை மூடிவிட்டு வேறு மண்ணின் தன்மையை கன்குணர்ந்து மனிதனுக்கு பயனளிக் கக்கூடிய வேறு ஒரு கிணற்றைத் தோண்டி அத்தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ளல் அறிவுடமையாகும். இதைப் போன்றே 'மதங்கள்' என்ற பாழுங்கிணறுகள் மனித சமூகத் தைக்கெடுக்கத் தோன்றி பல காட்களாயின. இப்பாழுங்கிணற் றிலுள்ள தண்ணீர் மனித வருக்கத்திற்குக் குடிக்கப் பயன் படுவதில்லை. இதை சீர்திருத்த கபிலர், புத்தர், வள்ளுவர், ஔவையார் போன்ற பல மூதாதை அறிஞர்கள் உழைத்த னர். தங்களது வாய் மருந்தையும் வீசிப்பார்த்தனர். என்ன பயன்? ஒன்று மில்லை. கெட்ட தண்ணீர் அப்படியே 'மதம்' என்னும் பாழுங்கிணற்றில் தயங்கி நின்று கொண்டு அதை உட்கொள்ளுவோருக்கு மயக்கத்தைக் கொடுத்துக் கொண்டே வருகின்றது. இதனாலேயே 'மதம் மனிதனுக்கு அபின்' (Reliccgcon is opccm fov peopcc) போன்றது என அறி ஞர்கள் கூறுகின்றனர். இது உண்மை என்பதை நாம் இன்று பிரத்யட்சமாகக் கண்டு வருகிறோம்.

மதக் கற்பனைகள்.

இன்று உலகில் கடைமுறையில் அனுசரிக்கப்பட்டு வரும் ஒவ்வொரு மதத்தைக் குறித்தும், ஒவ்வொரு விதமான கற்ப னைக்கதைகள் கட்டி விடப்பட்டிருக்கின்றன. இக்கற்பனைக் கதைகள் சில பேராசிரியர்கள் நாவல் மூலமாக எழுதுவதைப் போன்றே எழுதப்பட்டிருக்கின்றன. இக்கற்பனை ஆசிரியர்க ளே இம்மதங்களுக்குத்தலைவர்களுமாவார்கள். இத்தலைவர் கள்கூறியிருப்பதுஒன்று. ஆனால் அதைஅனுசரித்துவருவது பலவுமாகும். இன்றுஉலகத்தில் வழங்கும்படியானமதங்களைக் குறித்தும், மதம் என்றால் என்ன என்பதைக்குறித்தும் நாம்

கேட்கும்போது இம்மதத்தலைவர்களும், குருக்களுமென் பார்கள் மதம் என்றால் இன்னது எனறு கூறி விளக்க முடியாது. மதம் என்பதற்கு ஒரே ஒரு பொருள் கூறவும் இயலாது. ஆனால் நம்மவருள் மதத்தைப்பற்றி பேசும் போது அனைவரும் உணர்ந்துகொள்ளுவர் என்கிறார்கள். அப்படி ஏதாவதொரு பொருளைக் குறிப்பிட்ட போதிலும் அதற்கு போதிய சான்றுகள் கிடைப்பது மிக அரிதாகும். நமது நாட்டில் மதத்தலைவர்கள் மதமே அன்பு, மதமே சிவம், மதமே கடவுள் எனப்பலவாறு பலவகையில் புகழ்கின்றனர்.

இன்னும் மேல்நாட்டு மதப் பெரியோர்கள் கூறுவதைக் கவனிப்பினும் இவ்வாறாகத்தான் இருக்கிறது அவைகளுள் சிலவற்றைக் கவனிப்போம். E. W. ஹோப் கின்ஸ் என்பவர் கூறுவதாவது:—

"மதம் மனித வாழ்க்கையை உயரிய வாழ்க்கையுடன் சேர்க்கிறது. எல்லா மதத்திற்கும் சாதாரணமாகக் காணப் படுவது உயரிய ஒரு பொருளிடத்தில் நம்பிக்கைகொள்வதும், இந்த உயரிய பொருளுக்காக இவனது வாழ்க்கைச் செய்கை களை மாறுபடுத்திக்கொள்ளுவதும், அந்த மாறுபாடுகளி னால் இந்த மனிதன் உயரிய பொருளின் உதவியைக்கொண்டு இன்புற்று வாழ்வதுமாகும்" (History of religions page 2.) என்கிறார். சி. சி. ஜோஸி (C. C. Josey) என்பவர் (Psychology of religion-1927-பக்கம் 59-ல்) கூறுவதாவது. "மதம் என்பது சில சட்டதிட்டங்களைக்கொண்டது. அவைகள் மனி தனால் ஒழுகப்படவேண்டியவைகளாகும். அவைகள் நீதித் தத்துவங்களையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அவைகளை அனுசரிப்பதினால் மனிதனுக்கும் தயை, தாட் சண்யம் அன்பு, முதலியவைகள் ஏற்படுகின்றன" என்கிறார். இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நம் வாசகர்கள் பின் வரையப்படும் மதக் கொடுமைகளினால் தெரிந்து கொள்ள லாம். "மதமானது ஒரு தனிப்பட்ட மனிதனோ அல்லது சமூகத்தினதோ உணர்ச்சியை நாம் நம்பிக்கொண்டிருக்கும் ஒரே ஒரு பரம்பொருளினிடத்தில் சேர்ப்பதாகும்" என்கிறார் ஜே. பி. பிராட் என்னும் அறிஞர். (The religious consciousness 1920 page 2.) இன்னும் மதத்தைப்பற்றின கன் களைக் குறித்து குறிப்பிட்டுள்ளதாவது: (1) மதம் மனித னுக்கு உயரிய பொருளின் உதவியையளிக்கின்றது. (2) மதம் மக்களைத் தங்களது துன்பத்தினின்றும் காப்பாற்றுகின்றது.

(3) மதம் இன்னும் உலகில் மனிதன் செய்யும் தீமைகளை வெளிப்படுத்துகிறது. (4) மதம் மாறுவேடமாக மனிதனுக்கு ஒப்புயர்வற்ற "மோட்ச"த்தை அளிக்கின்றது. (5) மதம் மனித வாழ்க்கையை விடுத்து உயரிய வாழ்க்கையைத் தேடுகின்றது. (6) மதம் தனிப்பட்ட ஒரு மனிதனது உள்ளத்தில் ஆணிவேர்போல் பதித்து அவனது வாழ்க்கைக்குரிய வைகளை அளிக்கின்றது. (7) அது அன்பு, அடக்கம், ஒழுக்கம் முதலியவைகளை மனித வாழ்க்கையில் கற்பிக்கின்றது என்று பலவாறாகக் கற்பிக்கின்றது. (The Crozer quarterly—Julay' 32).

இன்னும் நமக்கு எல்லோருக்கும் எல்லாராலும் மதிக்கப்படுகிற டால்ஸ்டாய் (Count leo Tolstoy) மதமும்ஒழுக்கமும் எனனும் (Religion and Morality) நூலில் கூறுவதையும் கவனிப்போம். அவர் கூறுவதாவது "மத வேர்களின்றேல் உண்மையான ஒழுக்கம் நிலவாது. எப்படியெனின் வேரின்றேல் செடியில்லை" என்பதுபோல் என்கிறார். இவைகளெல்லாம் ஒரு சில பிரமுகர்களின் மதத்தைப்பற்றின தத்துவங்களாகும். இது நிற்க, வாளக்கணக்கில் மதத்தலைவர்களென்று கூறிக் கொள்பவர்களின் தத்துவங்களை இங்கு எடுத்தெழுதுவதென்றால் பத்திரிகை இடம் தராது. தவிரவும் இம் மதத்தலைவர்கள்எல்லோருக்கும் ஓரேஒரு அடிப்படையான முடிவுஎன்னவெனின், மனிதன் இன்புற்று வாழ்வதற்குரிய வழிகளைக்காட்டுவதே "மதம்" என்பதாகும். இதில் எம்மதத்தினருக்கும் அதிகமான ஆட்சேபணையில்லை. இந்த "இன்பம்" இந்த வாழ்க்கையிலா? அல்லது இவர்கள் நம்பும்படியான விண்ணுலக வாழ்க்கை என்பதிலா? என்பதுதான் தெரியவில்லை. மதக் கற்பனைகளைப்பற்றி இனி அதிகமாக கூறவேண்டுவதில்லையெனக் கருதுகின்றேன்.

II

மதத்தின் தற்காலிக நிலைமை.

மதமென்றால் என்ன? என்பதைச்சரிவர அதன் பொருளை அறிஞர்களால் உரைக்கமுடியாத இம்மதத்தின் தற்காலிக நிலைமை என்ன? என்பதையும் நாம் சற்று ஆராய்வோம். இன்று ஒரு மனிதக்குழந்தை பிறந்த நாட்களிலிருந்து இறந்து

சுடுகாடு என்னும் மயானம் சேரும் வரையில் மதத்தின் பல வகைப்பட்ட அலங்கோலங்களுக்கு ஆளாகின்றான். இது ஒவ்வொரு மதத்தினர்களும் தங்களுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு சடங்குகளாகச் செய்து வருகின்றனர். உதாரணமாக இன்று இந்துக் குடும்பங்களை காம் உற்றுக் கவனிப்பின் ஒரு இளங் குழந்தை பிறந்தவுடன் அதற்கு சில காட்களுக்குள் சுத்தி செய்தல் அல்லது "தீட்டு" கழித்தல் என்னும் ஒருவகைச் சடங்கைச் செய்கின்றனர் இவர்களுள் எத்தவிதமான தீட்டு ஏற்பட்டுவிட்டதோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் அத்தோ! தீட்டு என்பதற்கு முற்றிலும் முரண்பாடாக தாய், குழந்தை படுக்கும் அறைகள் ஜன்னல் வசதியின்றி இருள் மயமாக இருந்து சுத்தமின்றி—சுகாதார முறையற்றவைகளாய் இருப்பதை இவர்கள் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை.

இன்னும் இக்குழந்தைக்கு சிறிது பருவமடைந்த பின் கலாசாலைக்கு அனுப்பல் என்னும் ஒரு சடங்கைச் செய்து ஏராளமான வீண் செலவைச் செய்கின்றனர். உபாத்தியாயர் என்பவர் குழந்தைக்குத் தெரியாத ஏதேதோ பாஷைகளில் மந்திரிப்பதும், மயன் உளறுவதுமாகக் காலங்கழிப்பான். கல்விக்கடவுளெனப்புகலும்பெண்தெய்வமாகிய 'சரஸ்வதியை' கும்பிடாமல் எத்தப்பையனும் கல்வியை கம் நாட்டில் கற்பதில்லை. ஆனால் 'சரஸ்வதி' இன்னது எனத் தெரியாத அயல் நாட்டார்கள் எப்படிக் கல்விகற்கின்றனர் என்பதை நமது பண்டிதர்களைக்கேட்பின் பதிலுரைக்கத் தெரியாதவர்களாக விழிப்பார். இப்படி ஒவ்வொரு செய்கையிலும் மணம், மரணம், பண்டிகை, நோன்பு எனப் பலவாறாக ஒரு மனிதன் வீண்விரையம்செய்யும் பொருள்களுக்கு அளவேயில்லை. மனித ஒழுகுகத்தையும், முக்தியை அடையச் செய்யவும் தோற்றுவிக்கப்பட்ட ஒவ்வொரு மதமும் இன்று உற்றுக்கவனிப்பின் வயிற்றுப்பிழைப்பிற்காகவே பெரும்பாலும் அதிகரித்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை. சாதாரண இருட்டறையில் பூட்டிவைத்திருக்கும் 'முனியன்' முதற்கொண்டு பெரிய மின் சாரவிளக்கு எரியும் அறையில் பூட்டிவைத்திருக்கும் 'சிவன்' வரையில் தம்மை வணங்குவதற்கு ஆட்களும் பூஜை செய்வதற்குப் புரோகிதனும் வேண்டுமென்றால் இவற்றின் கூற்றை என்னென்று உரைப்பது? பெண்கள் உரிமை, விதவைகள் நிலைமை முதலியவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் மதம் ஏற்படுத்தப்படவில்லை. மனித உரிமைகளைப் புறக்கணித்து மிருகத்தன்மையையே மதம் தமது அடிப்படையான

தன்மையாகக் கொண்டிருக்கின்றது. பெண்ணைஅறால் புருஷனுக்கு அடிமை என்பதாகவே மதம் கற்பிக்கின்றது. விதவை என்றால் வேலைக்காரி என்பதாகவே மதம் கூறுகின்றது. இப்படி அலங்கோலப்படுத்தி, மனிதனுள் நிலவியுள்ள சுதந்திர உணர்ச்சியை வேரறுத்து, அடிமைமனப்பான்மையைப் புகட்டும் ஒரு அளவற்ற சக்தி மதத்திற்கு எக்காலத்திலுமுண்டு. இன்று மனிதன் செய்யும்படியான எந்த அநீதிக்கும் மதத்தினின்றும் சான்றுகள் காட்டக்கூடியவைகளாகவே அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைய பகுத்தறிவற்ற மக்களிடையில் மதம் பெருத்தசேதார் மயக்கப் பொருளாகவே குடிகொண்டு அவர்களை மயக்கிவருகின்றது.

மத அலங்கோலம்

நண்பர்களே! மதத்தின் நன்மைதீமைகளை நாம் ஆராயவேண்டிய சமயம் நெருங்கிக் கொண்டிருக்கும் இக்காலையில் உணர்ச்சியும்—உணர்வுமுள்ள இளைஞர்கள் இன்னும் இம்மயக்கத்தினின்றும் புத்துயிர்பெற்று உலாவுதல் அவசியமன்றோ? இன்று நமது நாட்டில் நடக்கும்படியான பலவகைப்பட்ட கொலைகளுக்கும், களவுகளுக்கும் முக்கிய காரணமென்ன? மதமேயாகும். சேற்று சென்னைத் திருவல்லிக்கேணிக்கடற்கரையில் நடந்த பெருத்த மகமதிய கூட்டத்தின் கருத்தென்ன? மத பக்தியேயாகும். யாரோ ஒரு பாதிரியார் எழுதினநூலில் மகமத் நபியைத் தாக்கி எழுதினாராம். உடனே மகமதியர்களுக்கெல்லாம் பெருத்த ஆவேசம் ஏற்பட்டுவிட்டது. இன்று யாரேனும் ஒரு முகம்மதியர் புத்தகத்தில் இயேசுவை தாக்கி எழுதினால் உடனே கிருஸ்துவர்களுக்கெல்லாம் கோபம் வந்துவிடும். இன்னும் வேறொருவர் இந்துமதத்தைத்தாக்கி எழுதினால் இந்துக்களுக்கெல்லாம் கோபம் வந்துவிடும். பார்த்தீர்களா! மதத்தின் அட்டூழியம், அது சும்மா மனிதனை விட்டுவிடாது. சகோதரத்துவத்தை நிலைநிறுத்தாது சண்டைச்சச்சரவை மூட்டிக்கொண்டு தானிருக்கும், ஜாதி வித்தியாசம், நிற வித்தியாசம், மத வித்தியாசம், ஒழுக்கம்—பழக்கம் முதலிய விதவியாசங்களைக்கற்பித்து மனிதனை மனிதன் என்ற முறையில் பாவிக்காமல் கேவலப்படுத்தி மனித சகோதரத்வத்தையும் கெடுக்கும்.

இவைகளினால்நிகழ்ந்துள்ளகொடிய சண்டைசச்சரவுகளனைத்தும் சரித்திரம் படித்தவர்களுக்கு நன்கு விளங்கும்.

இறந்தவர் திரும்பி வருவாரா?

(S. சிவப்பிரகாசம்.)

மூட நம்பிக்கையைப்
போக்கும் மூன்று கதைகளில் தந்தை சொன்ன
மூன்றாவது கதை.

(முதல் இரண்டு கதைகளும் பேயைப்பற்றிய தலைப் பின்கீழ் சென்ற மாதங்களில் வெளிவந்துள்ளன.)

உடனே என் தந்தை பின்வருமாறு தன் கதையை ஆரம் பித்தார்:—

நான் இப்போது இறந்தவர் திரும்பி வரும் விஷயத்தைப் பற்றிச் சொல்லப்போகிறேன். இது மிகப் பயங்கரமானது. இக்கதையைக் கெடு புத்தியுள்ளவர்களும், மூட நம்பிக்கை கொண்டவர்களுந்தான் கண்டு உணரவேண்டும்.

போலோங் (Pologne) தேசத்துப் பழங்குடியில் தோன் றிய ஜவிஸ்கி (Zawiski) என்னும் இளவரசன், தன் காலத் தில் கடந்த புரட்சிகரத் தலைவனாயிருந்தான். ஏனெனில், போலோங் தேசமானது அப்போது ரஷ்யர்கள் ஆட்சிக்கு

களங்கமற்ற ஓர் மனித சமூகத்தை ஸ்தாபித்து உலக சகோ தர தத்துவத்தை எற்படுத்தவேண்டுமானால், மதத்தை நாம் வேரறுத்தெறியவேண்டும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் சகோதரர்களே! நமது நிலைமையை உணரவேண்டிய சமயம் நமக்கு வாய்த்துவிட்டது. இப் பாழும் மதம் என்னும் பேயி னின்றும் விடுதலைப்பட்டு சுகமாக வாழ்தல் அவசியமாயின் மதத்தை ஆதரிக்காமல் 'பகுத்தறிவை' ஆதரித்துத்தான் நிற்க வேண்டும். இப்பகுத்தறிவை அடையவேண்டுமானால் பகுத் தறிவு பத்திரிகையை மாதந்தவறாமல் படித்து வாவும்.

உட்பட்டிருந்தது: ரஷ்யர்கள் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுயாட்சி பெறவேண்டுமென்பது ஜவிஸ்கியின் போவா! அப் புரட்சியில் ரஷ்யர்கள் வெற்றி பெற்றார்கள்! அதனால் ஜவிஸ்கி இளவரசனைத் தேசப்பிரஷ்டம் செய்துவிட்டார்கள் ரஷ்யர் கள். வயது முதிர்ந்த அவனது தாய், ஜவிஸ்கியைப் பின்பற்ற முடியாததால் போலோங் தேசத்திலேயே தங்கிவிட்டாள். தாய்க்குப் பிள்ளையைப் பார்க்கவேண்டுமென்ற ஏக்கம் அதை விட அதிகம். இதனால் ஜவிஸ்கியின் தாய் நோய் வாய்ப்பட் டாள். இதையறிந்த இளவரசன், திருட்டுத்தனமாகப் போ லோங் தேசத்திற்குப்போய்த் தன்னால கூடிய சிகிச்சையைத் தாய்க்குச் செய்துவந்தான்.

இச்சமயம், இளவரசன் எப்படியோ அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டுவிட்டான்! அதனால், உடனே அரசாங்கத்தாரால் பிடிபட்டான். "ஜவிஸ்கி மறுபடியும் புரட்சிசெய்ய வந்திருக் கிறான்" என்ற குற்றத்தைச் சாட்டி, அவனுக்கு மரண தண் டனை விதித்தார்கள். போலோங் தேசத்தை ஆண்டுவரும் ரஷ்ய மன்னனான ஜார், தன் தளகர்த்தனான பஸ்கியேவிஷ் (Paskievisch) என்பவனுக்கு, ஜவிஸ்கியின் தண்டனையை நிறைவேற்றும்படி பூரண அதிகாரம் கொடுத்தான். அத்தத் தளகர்த்தனும் ஜார் மன்னனின் உத்திரவுப்படி, ஜவிஸ்கியின் தண்டனையை நிறைவேற்றிக்கொண்டிருந்தான்.

இச்செய்தி, எப்படியோ ஜவிஸ்கியின் தாய்க்கு எட்டிற்று! தன் அருமைப் பிள்ளையை--குற்றமற்ற பிள்ளையை மரண தண்டனைக்காளாக்கினார்களென்றால், பெற்றவள் மனம்என்ன பாடு பட்டிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? தன் உடற் கஷ்டத்தையும் பாராது, உடனே ஒரு வண்டியிலேறித் தளகர்த்தனிடம் மிக விரைவாய் வந்து சேர்ந்தாள் ஜவிஸ்கி யின் தாய்.

வந்தவள் தளகர்த்தனைக் கண்டு, "என் பிள்ளை குற்ற மற்றவன்; என் உதவிக்காகவந்தவன். ஆகையால் அவனுக்கு விதித்த தண்டனை கூடாது" என்று சொன்னாள். தளக் கர்த்தன் பதில் பேசாது, தண்டனையை நிறைவேற்றுங் காரி யத்திலேயே ஈடுபட்டிருந்தான். கிழவி பதைத்தாள்! கெஞ்சி னாள்! மன்றாடினாள்! தன் பிள்ளை குற்றமற்றவனெனப் பல உதாரணங்களோடும் ருசுப்பித்தாள். என்ன செய்வது?

இதற்குத்தளகர்த்தன் சொல்லுகிறான்:—"எது எப்படி இருந்தாலும் இவனுக்கு மரண தண்டனை விதிப்பது, மற்றவர்களுக்கும் ஓர் உதாரணமாயிருக்கும்!"

இவ்வார்த்தையைக் கேட்ட கிழவிக்குப்பாதி உயிர் போய் விட்டதென்றே சொல்லலாம்! மீண்டும் கிழவி தன் மனத்தை திடப்படுத்திக்கொண்டு, "என் பிள்ளை, தன் உயிரையே திரணமாக மதித்து இவ்வெல்லைக்குள் வந்ததற்குக் காரணம், அவன் என்மேல வைத்த அன்பல்லவா! அதற்காக அவனைக் குற்றவாளியாக்கலாமா? நீங்கள் மனம் வைத்தால், என் பிள்ளைக்கு மன்னிப்புக்கொடுக்கலாம் உனக்கும் தாய் உண்டு! பிள்ளைக்காக சாகப்போகும் ஓர் தாயின் மனதைப் புண்படுத்தாதே!" என்று இறைஞ்சிக்கேட்டாள்.

இம்மொழிக்குத் தளகர்த்தன் இசையவில்லை. உடனே கிழவிக்குக் கோபமும் வீராவேசமும் எழுந்தன! அவள் தளகர்த்தனைப் பார்த்துக் கூறுகிறாள்:—"நீ என்மட்டில் கொஞ்சங்கூட இரக்கம் வைக்கவில்லை. கல்லது! நானும் உன்மட்டில் அதுபோலவே இருப்பேன் என்பதை நீ உணர்! இப்போது நீனைக்குத் தீங்கிழைக்கும் செயலை என்றும்உன்மனச்சாட்சி கண்டிருக்கும்! இந்த மணி நேரத்தில் கடக்குங் காட்சி, உன் மரணத்தறுவாயில் தோன்றும், இது நிச்சயம்! மரணத் தருவாயில மனத்திமாறிக் கிடக்கும் சமயம், நீ என்னை நினைத்துப்பார்! நான் உயிருடனிருந்தாலும், அல்லது இறந்திருந்தாலும் உன் கண்முன் தோன்றுவேன்!" என்று மனம் நொந்து கூறினாள்.

உடனே தளகர்த்தன் தண்டனையை நிறைவேற்றினான். ஜவிஸ்கி இளவரசன் அநியாயமாக மாண்டான்!

இந்நிகழ்ச்சிக்குப்பின், இருபத்து நான்கு வருடம் கழிந்தன! தளகர்த்தன் மூப்படைந்தான். அப்பருவத்தில் ஏற்படும் நோய், தளகர்த்தனைப் பீடித்தது. கைதேர்ந்த டாக்டர்களைக் கொண்டு அவன் நோயைப் போக்கப் பலர் முயற்சித்தனர். ஆனால் அம்முயற்சி வீணாயிற்று! நாளாக நாளாகத் தளகர்த்தனின் நிலை மிக மோசமாயிற்று. அவன் காணும் ஒவ்வொரு பயங்கரக்கனவுகளும் காட்சிகளும், அவனை மேலும் மேலும் மரணத்தறுவாய்க்கு அழைத்துச் சென்றது! அவன் அக்கனவுகளைப்பற்றி ஒவ்வொரு காலையிலும், ஆங்குள்ளவர்களிடத்திற் கூறுவதாவது:—

"ஓர் கிழவி—அதாவது ஜவிஸ்கியின் தாய், என்னருகில் வந்து தன் மகனைக் கேட்கிறாள். அவள் அடங்காக் கோபத்துடன் சதா என்னைப் பார்த்தபடியே இருக்கிறாள்! நான் செய்யும் சிறு விஷயங்களை யெல்லாம் அவள் கவனிக்கிறாள்! பொழுது விடிந்தால் தான் அவள் என்னை விட்டு அகல்கின்றாள்."

இன்னும் அத்தளகர்த்தன், இரவில் சித்திரை செய்து கொண்டிருக்கும் போதே திடீரென அலறிப், "பார்த்தீர்களா! பார்த்தீர்களா! அவள் என்னை நெருங்குகிறாள். என்னைப் பிடிக்க வருகிறாள்! பார்த்தீர்களா!" எனச் சத்தமிட்டு ஸ்மரணையற்றவன் போல் கிடப்பான்.

இதுபோல் வெகுகாள்வரை, தளகர்த்தன் அவதிபுற்றான். ஒருகாள் இவன் முன் கிழவி தோன்றினாள். அவள் முகத்தில் கோபப்பார்வை ஒளிரவில்லை. தளகர்த்தனைப்பார்த்துக் கிழவி சொல்லுகிறாள்:—"நீ செய்த குற்றத்தைப்பற்றி இப்போது கஸ்தியடைகிறாய்; ஆதலால் நான் உன்னை மன்னிக்கிறேன். இனி, நீ மன நிம்மதிபோடு இறப்பாய்!" என்று சொல்லி மறைந்தாள்.

தளகர்த்தன் இவ்வாறு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருப்பதைக்கண்டு, அந்தக்கிழவியான ஜவிஸ்கியின் தாய் எங்கிருக்கிறாளென்று தேடியலைந்தார்கள். அக்கிழவி இறந்து பன்னிரண்டு வருடமாயிற்று எனத் தகவல் கிடைத்தது. பிறகு தளகர்த்தனும் மாண்டான்!

அப்பயங்கர உருவம் எப்படி அவன் முன் தோன்றியது? அவன் இறக்குந்தறுவாயில் அவனுடைய மனச்சாட்சியே, ஜவிஸ்காவின் தாய்போல் உருப்பெற்று அவனைத் தண்டித்தது. இவைதான் பயங்காரப் பேய்கள்! இறந்த பின் திரும்பி வருவார்களென்பதும் இதுதான்!

வாலிபத்திலும் வயோதிகத்திலும் ஒருவர் செய்யும் கொலை, பழி முதலிய துர்ச்செயல்களை அவர்கள் மறந்து விட்டாலும், மனச்சாட்சியானது அவர்கள் இறக்குந்தருவாயில் அத் தீச்செயல்களைக் கண்முன் தோற்றி இம்சிக்கும்! வாதைகளில் மனச்சாட்சி கண்டிக்கும் வாதையே பொறுக்க முடியாது!

மதத்தால் கஞ்சிக்கு வழியுண்டா?

(சாமி. சிதம்பரனார்.)

"மதமே மக்களுடைய சாசுவீக வாழ்க்கையை வெளிப் படுத்துங்கருவி; மதமே மக்களைச் சிறந்த வாழ்க்கையில் வாழச் செய்வது; மதமே மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பது; மதமே மக்கட் சமூகத்தை ஒழுங்குபடுத்தி ஒரு கட்டுத்திட்டத்தில் அடங்கி கடக்கும்படி செய்திருக்கின்றது. மதமின்றேல் மக்கள் வாழ்க்கை மிருக வாழ்க்கையாகிவிடும். ஒரு வரும் கட்டுக்குள் அடங்கமாட்டார்கள்; கன்மை தீமைக்குப் பயப்படமாட்டார்கள்; மனிதனை மனிதன் அடித்துச் சாப்பிடக்கூடிய அலங்கோல நிலை தாண்டவமாடும்; ஆதலால் மனித சமூகத்தின் வளர்ச்சியை—கட்டுப்பாட்டை—ஒழுக்கத்தை—முனனேற்றத்தைக் கருதுபவர்கள் மதத்தைப் பரவச் செய்யவேண்டியது அவசியமாகும்" என்று உண்மையில் மதத்தைக் கொண்டு பாமர மக்களை அடிமைப்படுத்தி வயிறு பிழைக்க எண்ணும் போலிப் புரோகிதக் கூட்டமும் கூறுகின்றன. இக்கூற்று எவ்வளவுதூரம் உண்மையென்பதைச் சிறிது ஆராய்வோம்.

மனித சமூகத்தில் குற்றங்கள் நிகழ்வதற்குக் காரணம் என்னவென்பதை ஆராய்ந்தால், மதம் மனிதசமூகத்தை காப்பாற்றி வருகின்றது என்பதன் உண்மை நன்கு வெளியாகும்

பேய் என்றும் பிசாசு என்றும் பயப்படுகின்றவர்கள், ஒன்று பயங்கொள்ளிகளாக இருக்கவேண்டும். அல்லது குற்றவாளிகளாயிருக்கவேண்டும். பரிசுத்தமும் தெளிவும் உடைய மனத்தினர் எதற்கும் பயப்பட வேண்டியதில்லை. யாதொரு குற்றமும் காம் செய்யாமலிருந்தால் மனச்சாட்சி கம்மைக்கண்டிக்காது; காம் பயப்படத் தேவையுமில்லை. என்று என் தகப்பனார் கூறித் தம்கதையை முடித்துக்கொண்டார். உடனே என் தகப்பனாரின் கேயர் ஒருவர், வந்திருந்தவர்கட்கு வந்தனம் கூறினார். எல்லோரும் பேய் விஷயத்தில் கபடிக்கையற்ற வாதங்களோடு, சந்தோஷமாகத் தந்தம் வீடுபோய்ச் சேர்ந்தனர்" என்று தன் கண்பனுக்குக் கூறி முடித்தான்.

திருட்டு என்பது எல்லா காட்டினாலும், எல்லா சமூகத்தாலும் இப்பொழுது குற்றமாகக்கருதப்படுகிறது. ஆனால் திருட்டுக்குக் காரணம் என்னவென்று கண்டு அக்காரணத்தை ஒழித்தால் திருட்டு நிகழாமல் இருக்கமுடியும் அல்லவா? "மற்றவரைப்போல் தானும் வாழவேண்டு"மென்பதே பொதுவான மனித உணர்ச்சியாகும். மற்றவன் அனுபவிக்கும் சுகத்தைப் போல் தானும் சுகமனுபவிக்கவேண்டும் என்றே ஒவ்வொரு மனிதனும் நினைக்கின்றான். 'தன்னைக்காட்டிலும் கீழ் நிலையிலிருந்து துன்புறுபவர்களைக் கண்டு தனது நிலையும் இன்பமும் உயர்ந்ததென்று மகிழ்ச்சியடையவேண்டும்" என்று நீதி நூல்களும், மதக்கொள்கைகளும் கூறுகின்றதாயினும் அதை அனுசரிப்பார் அறிவுடையார் கூட்டத்தில் ஒருவரும் இருக்கமுடியாது என்பது திண்ணம். ஏனெனில் இதை நம்பி எந்த அறிவுடையாரும் "போதும்" என்ற திருப்தியுடன் சும்மாவிருப்பதையோ, தமது முயற்சியை இன்னும் விரிவுபடுத்தாமலிருப்பதையோ நாம் பார்ப்பதில்லை. ஆனால் அக்கொள்கை சிந்தனா சக்தியற்ற பாமர மக்களை முன்னேற வொட்டாமல் அடக்கி வைத்து, அவர்களுடைய உழைப்பின் பயனை அறிவுடைய கூட்டம் நோகாமல் அடைவதற்கு மாத்திரம் ஓரளவு—என்—முழுதும் உபயோகமாகிறது என்று சொல்லிவிடலாம்.

அறிவுபடைத்த கூட்டமே, சுகவாழ்க்கை மோகத்தால், எத்தகிதமான பொய்பித்தலாட்டங்களைச் செய்தாவது பொருள் சேர்த்துவாழ வேண்டும் என்று நினைக்கின்ற போது—அம்மாதிரியே அறிவுடைய மக்களில் பெரும்பாலானவர்கள், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம், அரசியல், பொதுஊழியம் ஆகிய எல்லாக்காரியங்களிலும் சுயகலத்தை முதன்மையாக வைத்து அவைகளை கடத்திப் பொருள் சம்பாதித்து வரும்போது—சாதாரண நிலைமையில் உள்ள—சோற்றுக்கும் வழியில்லாத தரித்திரர்கள் என்ன செய்ய முடியும்? தங்கள் வயிற்றுப் பசியைத்தணித்துக் கொள்வதற்கு வேறு வழியில்லாதபோது "திருடவேண்டும்" அதாவது பிறர்பொருளை அவர்கள் அறியாமல் கவர்ந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்குத்தோன்றுவது இயல்புதானே. இந்த இடத்தில் அவர்கள் வயிற்றுணவுக்கு வழியில்லாதவகையில் மதம் எவ்வாறு அவர்கள் குற்றத்தைத் தடுக்கமுடியும் என்பதைச் சிந்தியுங்கள்!

இது போலவே, பொய், கொலை, சூது முதலான கெட்ட காரியங்கள் என்று கருதப்படுபவைகள் பலவும் கடைபெறுவதற்குக் காரணம், மேற்போக்காகப் பார்ப்போர் வேறு பல காரணங்களைக் கூறினும், வறுமையே, அதாவது உணவுக்கு—சுகவாழ்வுக்கு வழியில்லாமையே முதற்காரணம் என்பதை யாரும் மறந்து விடுதல் கூடாது. இன்று குற்றங்கள் செய்து, அக் குற்றங்கள் உண்மையென மெய்ப்பிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை பெறுவாரின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் அவர்களில் ஆயிரத்துக்குத் தொளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மர் வறிய நிலையில் வாழும் மூன்றாந்தர வகுப்பைச் சேர்ந்தவர்களே யென்பதை அறியலாம். இப்படிப்பட்ட மூன்றாந்தர வகுப்பினர்க்கு மதம் எந்த வகையிலும் உதவி செய்வதாகக் கூற முடியாது.

மக்கட் சமூகத்தில் உயர்தர வகுப்பினராகக் கருதப்படுகின்ற பணக்கார வகுப்பினர் செய்யுங்குற்றங்கள் சட்டத்தில் அகப்படாதவை. சட்டத்திற்குக் கட்டுப்பட்ட குற்றங்களை அவர்கள் மறைமுகமாகவோ, வெளிப்படையாகவோ செய்தாலும் அவற்றினின்றும் தப்பித்துக்கொள்ளுவதற்குப்பல வசதிகள் இருக்கின்றன. மனிதனுடைய உடலையும் உயிரையுமவைத்துவிட்டு இரத்தத்தை மாத்திரம் உறிஞ்சுவது போல, ஏழை மக்களின் உழைப்பையும் அதன் பயனையும் கொண்டு அவர்களை கடமாடும் பிணங்களாகத் திரியச் செய்யும் பணக்காரர்களின் செயல் சட்ட சம்பந்தமானதாகவும், மத சம்மதமானதாகவும் கருதும்படி செய்யப்பட்டிருக்கிறது. "வேலைக்குத் தகுந்தகூலி" என்ற கருத்துக்கொண்ட "கர்ம பலன்" என்ற சொல்லை முன் பிறப்பில் அனுபவிப்பது என்ற பொருளில் மத வாதிகள் அமைத்துக் கொண்டதால் வந்த ஆபத்து இது. இதனாலேயே பணக்கார வகுப்பினர் சோகாமல் உலக இன்பங்களையெல்லாம் ஆண்டு அனுபவிக்கும் வாழ்வைப்பெற்றிருக்கின்றனர்.

இனி நடுத்தர வகுப்பினரோ முதல்தர வகுப்பினரின் ஆதிக்கத்துக்கு அடங்கி நின்று தங்கள் காரியங்களைச்சாதித்துக் கொள்ளுபவர்களாயிருக்கிறார்கள். தாங்களும் முதல்தரவகுப்பினராக—அதாவது முதலாளிகளாக ஆகவேண்டுமென்ற ஆசையினால் அவர்கள் மூன்றாந்தர வகுப்பினரை அடக்கி வைப்பதற்கும், காட்டிக்கொடுப்பதற்கும், அவர்களுடைய உழைப்பைக் கொள்ளை கொள்வதற்கும் முதல்தரவகுப்

பினரின் கையாட்களாக இருக்கின்றனர். இவர்கள் தங்கள் நிலையிலிருந்து சுலபத்தில் மாறாதவர்களாக இருப்பதற்குக் காரணம் மதமும், மதக்கோட்பாடுகளும் என்பதில் ஐயமில்லை; பெரும்பாலும் நடுத்தர வகுப்பினராலேயே மதங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்று கூறிவிடலாம். இந்த நடுத்தர வகுப்பினரே எந்த நாட்டிலும் மூன்றாந்தர வகுப்பினரின் எழுச்சிக்குத் தடைகல்லாக இருக்கின்றவர்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆகவே, முதல்தரவகுப்பினரும், இரண்டாந்தர வகுப்பினரும், தங்கள் சுயநலத்திற்காகப் போற்றிப்பாதுகாத்துவரும் மதங்களால் மூன்றாந்தர வகுப்பினர் துன்புறுத்தப்படுகிறார்கள்என்பது பகுத்தறிவாளர்களின் கொள்கையாகும். இது ஆராய்ந்து பார்ப்போருக்கு உண்மையென்று தோன்றாமலும் போகாது.

இந்த நிலைமையில் வறிய நிலையில் வாழும் சமூகத்தில் எப்படி குற்றங்கள் நிகழாமல் எதிர்பார்க்கமுடியும்? மதம் ஒன்றுதான் மனித சமூகத்தை முன்னேற்றக்கூடியது என்று சொல்லகூடிய குருட்டு வாதம் எப்படி உண்மையாக இருக்க முடியும்? எந்த மதம் மனித சமூகத்தின் வறுமையைப் போக்க உதவி செய்கிறது? பெரும்பாலான சமூகத்தின்உழைப்பை ஒரு சிறிய கூட்டத்தின் கையில் ஒப்படைப்பதற்காக மாத்திரம் மதம் உதவி செய்துகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். மதம் மக்களின் பசித்துன்பத்தை நீக்க உதவி செய்யவில்லை என்பதை சிக்காகோ நகரில் சுவாமி விவேகானந்தர் "ஏழை அஞ்ஞானிகளைப் பற்றி" என்ற தலைப்புடன் செய்த பிரசங்கத்தில் மிகவும் தெளிவாகக் கூறியிருப்பதை இங்கு நினைப்பூட்ட விரும்புகிறோம். அவர் கூறியதாவது:—

"ஏ கிறிஸ்தவர்களே! நீங்கள் அஞ்ஞானிகளென்று பெயர் சொல்லி அழைக்கும் எங்கள் மதத்தவர்களின் ஆத்மாக்களைக் காப்பாற்றுவதற்காக அன்புடன் பாதிரியார்களை அனுப்புகிறீர்களே! பசியினால் வருந்தும் அவர்களுடைய உடம்புகளைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் என் யாதொரு முயற்சியும் செய்வதில்லை? இந்தியாவில் பயங்கரமான பஞ்சகாலங்களில்பல்லாயிரக்கணக்கானமக்கள்வயிற்றிற்குச்சோறில்லாமல் மாண்டு மடிந்தார்களே! அவர்களைக்காப்பாற்ற கிறிஸ்

துவர்களாகிய நீங்கள் என்னசெய்தீர்கள்? இந்தியாவில் எங்கு பார்த்தாலும் நீங்கள் கிறிஸ்துவக் கோயில்களைக் கட்டுகிறீர்கள்! ஆனால் கீழ் காட்டார் மதமில்லாத குறையினால் கஷ்டப்படவில்லை; அவர்களுக்கு மதம் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. அவர்களுக்குக் கஞ்சியில்லாமையே பெருங் கஷ்டமாயிருக்கிறது. இந்தியாவிலே கீழுஞ்சுட, மேலுஞ்சுட; நெஞ்சுலர்ந்து, நாவறண்டு கஞ்சி! கஞ்சி!! என்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கதறுகிறார்களே! அவர்கள் கஞ்சி கேட்டால் அதற்குப் பதிலாக நாம் கல்லைக் கொடுக்கலாமா? வயிற்றுப் பாட்டுக்குக் கஞ்சியில்லாமல் வருந்துவோர்க்கு மதப் பிரசாரத்தைச் செய்வது அவர்களை அவமானப்படுத்துவதாக ஆகுமல்லவா?"

இது, சுவாமி விவேகானந்தர் கிறிஸ்துவமதத்தைக்குறித்துப் பேசிய பேச்சாகும். கிறிஸ்தவர்கள் மதத்தின் பெயரால் செலவழிக்கும் பொருளில் ஓரளவு மக்களுடைய கல்விக்கும், வைத்திய உதவிக்கும் செலவழித்து வருகிறதை நாம் பார்க்கிறோம். ஆனால் இந்துக்கள் என்று சொல்லுகின்றவர்கள் தங்கள் மதத்தின் பெயரால் செலவிடுவதில் ஒரு காசும் கூட ஏழைகளுக்குப் பயன்படுவதில்லை; நாட்டின் நன்மைக்கு உபயோகப்படுவதில்லை என்பது உண்மையாகும். ஆகவே விவேகானந்தர் கிறிஸ்தவ மதத்தைப் பற்றிக் கூறியிருக்கும் வார்த்தை எல்லா மதத்துக்கும் பொருந்தும் என்பதை மறுக்கமுடியாது.

ஆதலால் மக்களின் பசித்துன்பத்தைப் போக்க உதவி செய்யாத வரையில் உலகில் எந்த மதம் இருந்துதான் என்ன பயன் என்று கேட்கின்றோம்? இப்படிப்பட்ட உலக நன்மைக்கு எள்ளளவுமுதவி செய்யாத மதங்களைக்கட்டிக்கொண்டு அழுவதில் ஏன் மக்கள் இன்னும் தங்கள் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கவேண்டும்? இதுவரையிலும் மதங்களைக்கட்டிக் கொண்டு அழுதது போதும். இனியாவது அவைகளைத் தகர்த்தெறிய முன் வருவது நன்றல்லவா? கஞ்சி! கஞ்சி! என்று பரிதபிக்கும் பரிதாபத்திற்குரிய மக்களின் துயரைக் களைந்து, அவர்களின் சந்தோஷ ஆரவாரத்தைக்கண்டு, உள்ளங்களிக்க மனங்கொண்டு ஒன்றுகூடி உழைப்பது அறிவாளர் கடமை அல்லவா?

சாவும், பின் நிகழ்ச்சியும்.

டாக்டர், R. P. பராஞ்சிபை

இவ்வுலக வாழ்க்கைக்கும், மேலுலக வாழ்க்கைக்கும் மத்தியில் ஏற்படும் சாவு என்னும் ஏதோ ஓர்வித நிகழ்ச்சியைப் பற்றிய கொள்கைகள்தான் மதத்தைப் பிரபலமாகப் போற்றும் மதவாதிகளுக்கு மூலபலமாய் இருக்கிறது.

சாதாரண மக்கள் மரணம் என்பதை மன வாக்கு காயங்களுக்கு எட்டாத ஏதோ ஓர் வகை அசாதாரண சம்பவமாகவே கருதுகின்றனர். அதிதைரியசாலிகளும் சாவு என்றால் பீதி கொண்டு, அதினின்றும் மீழ்வதற்கான எத்தகைய செயல்களையும் உடனே செய்ய முற்படுகின்றனர். உண்மையில் மரணத்தைப் பற்றிய பயமானது ஜன சமூகத்திற்கு ஒருவிதத்தில் நன்மையே உண்டாக்குகின்றது என்று சொல்லலாம். ஏனெனில் வாழ்நாளில் ஏற்படும் பல்வேறு சம்பவங்களில் மரணத்தையும் ஒன்றாகக் கருதும் எந்த சமூக வாழ்வும் மன அமைதியோடிருத்தல் அரிது. மனிதர்க்கு ஆயுட்காலம் மிகவும் முக்கியம் ஆதலின், ஒவ்வொருவரும் அதனை இயன்றளவு காப்பாற்றல் அத்தியாவசியமேயாம். ஏன் இவ்வுலகில் தோன்றும் பல்வேறு ஜீவன்களின் வாழ்வும் தத்தம் உயிர் நிலைப்புக்குப் போராடுவதிலேயே இருக்கின்றதெனக் கூறலாம். இவ்விதமான ஜீவிதவுணர்ச்சி உயிர்வாழ் பிராணிகளிடம் இல்லாதிருப்பின் ஜீவராசிகள் வெகு காலத்திற்கு முன்னரே இவ்வுலகத்திலிருந்து மறைந்துபோயிருக்கவேண்டும்.

உயிரின் ஆதியையும், அந்தத்தையும் அறியவேண்டுமென்ற அவாவானது எக்காலத்திலும் ஒரே தன்மையில் இருத்தல் கவ

மக்கள், கஞ்சி! கஞ்சி! என்று கதறிமடியும்போது, கோயில் கட்டுவதும், கல்லுத்தலையில் அரும்பண்டங்களைக் கொட்டி னாக்குவதும், உற்சவம் நடத்துவதும், மதப்பிதிதிகளை பல்லக்கில் வைத்துப் பிணத்தைச் சுமப்பதுபோல் சுமந்து திரிவதும் அறிவுடைய கூட்டம் செய்யக்கூடிய காரியமா?

னித்தற்பாலது. விஞ்ஞான விற்பன்னர், எப்போதாவது ஒருகாலத்தில் ஒரு பரம அணுவைத் தாங்களாகவே (Protoplasm) சிருஷ்டித்துவிடக்கூடும்; ஆனால் அதற்கு அறிவைப் புகட்டி பலவித மேலறிவு பிராணிகளாகத் தோற்றுவிக்க அவர்களால் முடிவது கஷ்டம். "ஜடம்" என்ற அசேதனப் பொருளிலே "ஆத்மா"வெனும் சத்பொருள் ஒன்று அதற்கு அங்கியமாக இருக்கின்றதா? இல்லையா? என்பதைப்பற்றிநாம் இங்கு ஆராயப்புகவில்லை; எனினும் ஜடப்பொருள் இன்றேல் உயிரின் பலவித பரிணமிப்பை எவ்விதத்திலும் அறிந்துகொள்ள முடியாது என்பது மாத்திரம் உண்மை. சரீர சாஸ்திர விற்பன்னர்களும் (Physiologists) அறிவின் பலவித ஆற்றல்கள் மூளையிலிருக்கும் பல அணுக்களின் வெவ்வேறு வகையான சேர்க்கையினாலேதான் ஏற்படுகின்றனவெனக் கூறுகின்றனர். இதனால் ஜடபதார்த்தங்களின் (Matter) மூலமாகத்தான் அறிவின் தன்மையை உணரவேண்டுமென்று தெரிகின்றது. எனவே சாதாரணமாக மனிதன் தன் வாணாளில் உயிர் அல்லது ஆத்மாவைப்பற்றிப் பிரமாதமாக எண்ணாமல், அது தனது புத்திக்கு எப்படி உணரப்படுகின்றதோ அல்விதமே எங்குமுள்ளதாக நினைக்கவேண்டியதோடு தன் அறிவு அவ்வப்போது எதெதை உணர்த்துகின்றதோ அதை அனுசரித்து வாழ்க்கையையும் கடத்துதல்வேண்டும். மரணத்திற்குப்பின் ஜீவன் எத்தோற்றத்தோடு இருக்கின்றதென்பது விஞ்ஞான விற்பன்னாலேயே ஆராயத்தக்க விஷயமாகும். தற்சமயம் அவ்விஷயத்தைப்பற்றிய அத்தாட்சிகளை ஆத்மவாதிகள் (Spritualists) எத்தனையோ சோதனைகளால் விளக்க முற்பட்டும், அவற்றை அறிஞர் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலைமைக்கு வரவில்லை. எது எவ்வாறிருந்த போதிலும் நிருமாணித்துக் காட்டமுடியாத விஞ்ஞான ஆராய்ச்சி முறையில் சோதித்துத் தெளியப்படாத—எதோ ஒரு யுகத்தில், எவராலோ அவரவர்களுடைய உத்தேசத்திற்கும், மனப்பான்மைகளும், பயத்திற்கும் தக்கபடியாகச் சொல்லப்பட்ட மேற்குறித்த மரண சம்பந்தமான கூற்றுக்களால் இந்த ஆத்மாவைப்பற்றிய விஷயத்தை முடிவு கட்டுதல் அறிவுடமைக்கு அழகல்ல.

ஏற்கனவேயுள்ள மரணத்தைப்பற்றிய பீதியை பலவித மதங்கள், அவற்றின் பலவகையான மௌடீக சாஸ்திர சித்தாந்தங்களாலும், மூடத்தனமான எத்தனையோ வகையான சடங்குகளாலும் எவ்வளவோ மடங்கு அதிகமாக்கி வருகின்றன. நரக லோகங்களென்ன? ஆங்காங்கு நேரும் நித்திர

வதைகளென்ன? இறந்தபின்னும் இவ்வுலகிலுள்ள ஆபாசங்களால் அவனது ஆத்மா துன்பமடைவதென்ன? இறந்து பிறத்தல், பிறந்து இறத்தலகளென்ன? சித்ராகுப்த மெனுத வேதனைகளென்ன? இன்னும் இவைபோன்ற எண்ணற்ற ஆபாச சித்தாந்தங்களே இப்போது மனித சமூகத்தைக் கணகற்ற கஷ்டங்களால் நெருக்குவிட்டு கைந்துருகுமபடியான பழக்கவழக்கங்களில் ஈடுபடுத்தி பரிகவிக்கச் செய்துவருகின்றன:

உயிரிழந்த சரீரத்தைப் பல மதத்தினர் பற்பல விதங்களில் தகனம் செய்துவந்த போதிலும், எல்லா மதத்தினரும் மாண்டோருக்குரிய ஈமக்கிரியைகளைச் சரிவரச் செய்தாலொழிய அவர்களது ஆத்மா சாந்தமடையாதென்பதை ஒருங்கே ஒத்துக்கொண்டு அவ்வாறே கடந்து வருகின்றனர். மனிதன் இறந்தபின் அவனது ஆத்மா பிரிந்து மேலுலகம் செல்கின்றது (Resurrection) என்ற கொள்கையினாலேதான் சரீரத்தை அடக்கம் செய்யும் விதங்களில் பலவித விவகாரங்கள் கிறிஸ்துவ நாடுகளில் கினம்பியிருக்கின்றன. உயிரோடிருக்கும் மக்கள் கஷ்டப்பட்டிருக்க, எத்தனையோகோடி பொன் சமாதிகளிலும், இறந்தவர்களின் ஞாபகார்த்த மாகக் கட்டும் கோபுரங்களிலும் வீணாகச்செலவிடப்பட்டு வருகின்றது. ஜனங்கள் குடியிருக்கவே இடம் கிடைக்காத ஊர்களிலும் சமாதிகளுக்காக எவ்வளவோ விஸ்தீரணமான இடங்கள் விடப்பட்டு வீணே கிடக்கின்றன. அவற்றைப்பாதுகாக்க ஏராளமான பணவிரயம் ஆவதோடு அவ்வித மயானங்களால் மக்கள் ஆரோக்கியத்திற்கே கெடுதியும் ஏற்படுகின்றது. முகமதிய நாடுகளில் பிணங்களின் மேல் எத்தனையோ பெரிய சிங்காரமான கோரிகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் மிகத் தேர்ந்த சிற்பவேலைத்திறனைக் காண்பிப்பதாயினும், எத்தனை கோடி மக்களின் இரத்தத்தின் சத்தை வீணாக்கியிருக்கின்றனவென்பது கவனிக்கத்தக்கதாகும். ஈஜிப்ட் தேசத்திலுள்ள சமாதிகள், கோபுரங்கள் முதலியவற்றை அமைக்க எத்தனை அடிமை (Slaves) களின் கெற்றிக்கண்ணீர் நிலத்தில் பாய்ந்திருக்கவேண்டும்! ஈமச்சடங்குகள் செய்வதாலும், கருமாதி சமாராதனைக் கிரியாதிகள் கடத்துவதாலும் எத்தனை இந்தியக் குடும்டங்கள் குடிக்கக்கஞ்சியில்லாமல் அலைகின்றனர்? செத்தவர்களால் ஏற்படும் சகியாத் துயரைத்தைவிட, அவர்களின் கருமாதிக்குக்காகக் கடன்பட்டுப் பின் உயிருள்ள அளவும மீளாத்துன்பத்திலழுந்தும் தயரம் பெரிதாகத்தோன்றுகின்றது. ஹிந்துக்கள் செய்யும் கருமாதிச் சடங்

குகளை கேரில் காணாதவர்களுக்கு அவைகளைப்பற்றி விரித் துக் கூறின் அது சிறிதும் கம்பத்தகாத ஆபாசமாகவே தோன்றும். பிணத்திற்குத் தீ மூட்டுவதற்கு முன், அதன் ஆத்மா கஷ்டமின்றிப் பிரிந்துபோக வேண்டிய வசதிகள் முத லில் செய்யப்படுகின்றன. சாந்திக்காக வாய்க்கரிசி சமைத் துப் படைக்கப்படுகின்றது. தவிர "கோடி வஸ்திரம்" என் பதாக நல்ல வஸ்திரமாவது, இல்லாவிடின் ஏதோ ஒரு புதிய மஞ்சள் துணியாவது அப்பிணத்திற்குக் கட்டப்படுகின்றது. மீண்ட ஆத்மாவிற்குப் பாலமுதளிக்கப்பசுக்களைக் கோதான மாகக் கொடுக்கப்படுகின்றது. ஆகியில் "சககமனம்" என்ற பெயரால் இறந்த கணவனோடு அவனது உயிருள்ள மனைவி யையும், அவன் தனிமையைத் தீர்த்து அவனுக்கு எங்கும் சுக மனிக்குமாறு ஒருங்கேவைத்துக் கொளுத்தப்பட்டுச்சித்ரவதை யும் செய்யப்பட்டது! தற்காலத்தில் ஆண் மக்களனைவரும் மீசையை எடுத்துவிடவேண்டும்! மனைவியர் தலை மொட் டையடிக்கப்படவேண்டும்; அவ்வாறு செய்வதற்குக்காரணம் அவனது மனைவிமார் அழகைக்குறைத்துக் கற்புக்குப்பங்கம் வராமற்காப்பதென்று, இரண்டாவதாக அவனது ஆத்மாசி ரமமன்னில சுவர்க்கலோகம் சேர்வதற்கு ஒரு மயிர் ஏணி ஏற் படுத்துவதற்கும் ஆம்!

அந்த ஜீவாத்மா சில நாட்கள் வரையிலும் பூமியில் சஞ் சரித்த முக்கியமான இடங்களுக்கு செல்கிறதாம்; அதன் நிமித் தம் பலவித படைப்புகள் போட்டு அதன் சாந்திக்காக பூஜை செய்யவேண்டுமாம்! கருமாதி வருஷாந்திர பூஜா காலங்க ளில் படைக்கப்படும் போஜனத்தின் ஒரு கைப்பிடிச்சாதத்தை காகம் சாப்பிடவேண்டியது அத்யாவசியம். அவ்வாறு அந்த காளில், காகம் சாதம் எடுக்கத் தவறினால் அந்த ஜீவன் தன் னால் அனுபவிக்கக்கொடுத்து வைக்காத ஏதோ ஒன்றை கினைத்துத் துக்க சாகரத்தில் ஆழ்ந்து கிடப்பதாகவும் கரு தப்படுகின்றது. உடனே அவனது சுற்றத்தினர் அவ்வித அபேக்ஷை என்னவென உத்தேசித்து அதனை நிறைவேற்று வதாக நிருமாணித்தபடி அகேக மணி நேரம் காத்துச் சலிப் பார்கள். அப்பொழுதும் வராதிருப்பின் தர்ப்பைப் புல்லை முடிச்சுப் போட்டுக் காகமாகப் பாவனை செய்து அந்தச் சா தத்தைத் தொட்டாகிலும் தங்கள் மூடமனத்தைத் தேற்று வார்கள்! அவ்வித சாஸ்திரப் பிராயச் சித்தம் செய்தபோதி லும் அவர்களது கோழைமனம் மாண்டவரின் ஜீவன் சாந்த மடையாததால் தங்களுக்கு என்னென்ன துன்பம் எப்படி யெப்படி வருமோ வென அந்தோ! எங்கிப்பரிதவிக்கும்.

கருமாதி காரியங்கள், உயிரிழந்தநாள்முதல் பன்னிரண்டு காட்கள் வரை ஒவ்வென்றாக கடைபெறும். முதல் வருஷாந்திர காளானது மிக்க சிறப்பாகக் கொண்டாடப்படும்; அன்றைய தினம் சுற்றத்தார் அனைவருக்கும், மேலும் ஏராளமான பிராமணர்களுக்கும் போஜனம் அளிக்கப்படும். மகனானவன் இவ்விதவருஷாந்திர சிரார்த்தத்தை ஒவ்வோராண்டும் தவறாது கடத்தவேண்டும். அந்தக்குடும்பத்தினர் விவசாயிகளாக இருப்பின் அவ்விததிதி காட்களில் அவர்களது கால்கடைகள் ஒன்றாகிலும் வேலை செய்யக்கூடாது; எனெனில் மாண்டவனின் ஜீவன் அந்தப்பிராணிகள் ஏதாவதொன்றில் புனர் ஜனனம் எடுத்திருக்கக்கூடுமன்றோ!

இவ்விதமௌடீகப் புராணக் (Anthroporphic) கொள்கைகள் ஹிந்துமக்களிடத்தே மாத்திரமதான் காணப்படுகின்றனவென்று நினைக்கவேண்டாம். அவைகள் மனிதசமூகம் உள்ள இடங்களிலெல்லாம் பொதுவாகவே குடிகொண்டிருக்கின்றன; ஆனால் ஒவ்வோரிடங்களிலும் சடங்குகள் மாத்திரம் காலதேசவர்த்தமானங்களுக்கேற்ப வெவ்வேறு விதமாகக் கையாளப்படுகின்றன. பேய்ன்டன் (Paignton) என்ற இங்கிலாந்தின் கடற்கரையிலிருந்த ஒரு ஊரில் வசித்துவந்த—சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற ஓர்மாது, தனது தாயின் சமாதிசமீபத்தூபமிட்டு, அன்னையபடைத்த விஷயமாக நேர்ந்த ஒரு விவகாரம் நீதிமன்றம்வரை வந்த விஷயம மிக்க ஆச்சரியமாகவே நமக்குப் புலப்படுகின்றது. சமாதியை அழிப்பதும், பிணத்தை அடக்கம் செய்யும் விஷயத்தில் பிறர்தலையிடுவதும் மிக்க துவேஷத்தை மூட்டுவதாக எல்லா ஜனசமூகங்களாலும் கருதிப் போற்றப்படுகின்றது. சென்ற ஜெர்மனியுத்தத்தில், உயிரிழந்த மகனின் உடலினின்றும் கொழுப்பை ஜெர்மனியர் சேகரித்தனர் என்பதாக யாரோகட்டி விட்டதாலே ஏற்பட்ட எதிர்ப்பே அவர்களின் அழிவிற்குப் பிரபல காரணமாக இருந்தது.

மாண்ட மக்களின் ஆதமாசகளுக்காக மனிதர் மேற்கொள்ளும் சிரமத்தை, உயிருடன் இருக்கும் மக்களின் நன்மைக்காக உபயோகிப்பார்களெனின் ஜன சமூகம் எவ்வளவு முன்னேற்றமடைந்திருத்தல் கூடும் என்பதை யோசிப்பீர்களாக! ஒவ்வொரு மனிதனுடைய செயல்களும அவை பிறர்பால் எத்தன்மையில் பிரயோஜனகரமாகப் பிரதிபலிக்கின்றதென்பதிலேயே வேரூன்றி நிலைபெறுகின்றன. ஒவ்வொரு

வரும் பகுத்தறிவுச்சுடரைக்கொளுத்தி அதன் வெளிச்சத்தில் மரணத்தைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் மௌடீக கோக்கங்களெல்லாம் சூரியன்முன் பனிப்படைகளேபோல் பறந் தோடும்; அன்றியும் மதப்பித்தலாட்டங்களால் ஏற்பட்ட மரணத்தைப்பற்றிய பயப்பேய் மாய்ந்து, மாந்தர் மரணத்தை நிரணமாகப் பாவித்து, ஆனந்த வாழ்வெய்துவர் என்பது திண்ணம். மரண்டவனுக்குக் கோடித் துணியையும் அறுவகையுண்டியையும் படைத்துப் புதைப்பதைக்காட்டிலும் அவைகளை மக்களுக்குக் கொடுப்பது பல வகையிலும் சிறந்த தாகும். சிற்பவேலைப்பாடுகளமைந்த மசூதிகளையும், ஸ்தூபி களையும் இவ்வுலக இன்பங்களை என்றும் வேண்டாத மாண்ட பிரேதங்களின் மேலமைத்து அழகு பார்ப்பதை விட, ஏழை களுக்கு உதவும்படி சத்திரம் சாவடிகளைக் கட்டுவித்தல் மிக வும் தகுதியான செய்கையாகும்.

இதனால் ஓர் அறிவாளி (Rationalist) என்பவன் மே லான இலட்சியங்களில்லாதவனென்று எண்ணவேண்டாம். அவ னது இலட்சியங்களெல்லாம் நமது கண்முன் உயிருடன் நடமா டும் மக்களை மேலோங்கச் செய்வதிலேயே செலுத்தப்படுகின் றன. ஏதோ மாண்டவர்களின் ஆத்ம சொரூபங்கள் (Splrits) என்பனவற்றைக் கரை சேர்ப்பதில் இவன் தனது இலட்சியங் களைச் செலுத்துவதில்லை. இந்த ஒரே காரணத்தினால் தான் அவ்வித அறிவாளிகளே இலட்சியத்தை நிருமாணித்துக் காட்டமுடியும் என்பதும், அவர்களே மக்களுடைய முன்னேற் றத்தையும், இன்பத்தையும் மேலோங்கச் செய்வ ரென்பதும் உண்மையாக ஒப்புக்கொள்ளக்கூடியதாகும்.

மோக்ஷமும் நரகமும் மோசக்காரர்கள் கற் பனை.

மறுஜன்மம் என்பது மயக்கத்தின் கற்பிதம்.

நிலைமைக்குத் தக்கபடியே நீதியும் ஒழுக்க மும்.

காலத்துக்கு தக்கபடி கடவுள்கள் கற்பிக்கப் படுகின்றன.

ஈ. வெ. ரா.

ருஷியரின் உல்லாச வாழ்க்கை.

(தோழர் அஜீஸ் எழுதியது.)

"யூதர்கள் அழுகைக்கும், துக்கத்திற்கும் எப்படி பேர் போனவர்களோ, அப்படியே ருஷியர்கள் சங்கீத ஆர்வத்திற்கும், கடன ஆட்டத்திற்கும், மற்ற களியாட்டங்களுக்கும் பேர்போனவர்கள்" என்பதோர் பழமொழி. சமாதான காலங்களிலல்ல: ஆனால் போர்க்கோலந்தாங்கிய அமர்க்களங்களிலே தான் ருஷியர்கள் பல்வகைக்களியாட்டங்களில் காலத்தைக் கடத்திவந்தனர். வீர வாள் ஏந்தி கோர யுத்தம் புரியுங் தங்களது உள் காட்டுக் கலக காலத்திலும் அவர்கள் கருத்து களியாட்டங்களில் நாடாமலில்லை. தீமூட்டி சுற்றி நின்று ஆடுவதும் பாடுவதுமுண்டு. தங்களது தாய்காட்டைப் பற்றிய கீதங்களும், மற்றும் பல கீதங்களும் இதமாய்ப்பாடி இன்புறுவதுமுண்டு.

இவ்வண்ணம் அவர்கள் செய்துவந்தது கொடுங்கோல் கோமான் சார் காலத்தில்தான். சார் சக்கரவர்த்தி காலத்தில் குடில் வாழ் குடியானவர்களுக்கு ஓய்வு ஒழிவென்பது இல்லாமலிருந்தது. தங்களது திருவிழா பெரும் காட்களில் மகிழ்வெய்திக் களிப்புறக் கூட அவர்கள் கையில் காசில்லாமல் அவதிப்பட்டனர். இக்காலங்களில் கோதுமையினின்று இறக்கப்பட்ட 'வோட்கா' என்ற விஸ்கியைக் குடிப்பதும், தங்களது புரோகிதர்களுக்குப் பகிர்ந்துகொடுத்து இன்புறுவதையுமன்றி பிறிதொன்றையும் 'கடவுள் விசுவாசிகளாகிய ருஷியக் குடியானவர்கள் அறிந்திலர். "குடிகார குடியானவன், நாட்டிற்கும் மதத்திற்கும் விபத்து ஒன்றுமிழைக்கான்" என்பது அன்றைய அரசியல் வாதிகளின் பழமொழியாகும்.

இன்றைக்கு ருஷிய அரசியல் முறை அடியோடு மாற்றப்பட்டுவிட்டது. விவசாய முறையில் பல பல மாற்றங்களேற்பட்டு கவீனம் புகுத்துவிட்டது. விஞ்ஞான முறை மேலோங்கி விவசாய உலகு முழுவதும் இயக்கிரம ஆட்கொண்டுவிட்டது. மேலும் இன்று காட்டின் நிலம் முழுதும் அரசாங்கத்தின் சொத்தாக்கப்பட்டுவிட்டது. கூட்டுறவு விவசாய முறை குடி

கொண்டுவிட்டது. மேலும் இன்று காட்டின் நிலமுழுவதும் அரசாங்கத்தின் சொத்தாக்கப்பட்டுவிட்டது. கூட்டுறவு விவசாய முறை குடி கொண்டுவிட்டது. நிலச்சுவான்தார்களும், மிராசுதார்களும் சோவியத் எல்லையை விட்டு விரட்டப்பட்டு விட்டனர். மதம் அரசாங்கத்தினிடமிருந்து பிரிக்கப்பட்டு விட்டது—இப்பொழுதுதான் 'கோல் ஹோஸ்நிக்' (Kolhoz-nik) எனும் ருஷியக் குடியானவன் உரிமை பெற்றான். புலனின் கண் அவன் சில குறிப்பிட்ட மணி நேரமே தொழில் புரிகின்றான். மனங்குளிர திருப்தி பெறுகிறான். ஓய்வு பெற்று உல்லாசத்தில் ஈடுபெறவேண்டிய நேரமும் அவனுக்குக் கிடைக்கிறது. தனது அறிவு வளர்ச்சிக்குரிய கலைப் பயிற்சிக்கும் அவன் போதிய காலத்தைப் பெற்றுள்ளான்.

முறையோடு நிறுவப்பட்ட ஓய்வும், உல்லாசமும் மக்கள் கலனுககும், வளனுக்கும். உடலோம்பற்கும் பெரிதும் பயன் கல்குவதாகும். கலைபயின்று ஓய்வுகாலத்தைப்போக்குவதி னும் மக்களனைவரும் கலாவல்லவர்களாகவும் விளங்குவர். சோவியத்துக் கல்வி அதிகாரிகளும் பொறுப்பேற்றுக் காரியம் நடத்துகின்றனர். மக்களின் மடமையை அகற்றி அறிவைப் புகுத்துகின்றனர். ஓய்வு நேரங்களை கலைப் பயிற்சியில் செலுத்தி மக்கள் கலனுக்கும், நாட்டுவளனிற்கும் ஆக்கம் தேடுகின்றனர்.

ருஷிய கிராமங்கள் தோறும் நூற்றுக்கணக்கான கூத்து மேடைகள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவண் நடிகர்களனை வரும் குடியானவர்களையே கொண்டு நாடகங்கள் நடத்துவருகின்றன. குடியானவர்க்கு உற்சாகமளிக்கும் விஷயங்கள் பலவும் கொண்டே நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. இவ்வரங்கங்கள் மூலமே குடியானவர்களிடை அரசியல், சமூக ஆராய்ச்சித் துறைகள் பலவற்றைப் பற்றியும் வியக்கத்தக்க வண்ணம் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. வெற்றியும் பெற்று வருகிறது. அரங்கங்கள் மூலமும், சினிமாப்படங்கள் மூலமும்பண்டைய விவசாய முறைகளை இன்றைய விஞ்ஞானத்தைக் கைகொண்ட விவசாய முறையே மிகச் சிறந்ததென விளக்கப்பட்டு வருகிறது. உடல் உழைப்பினாலாய பணியை விட இயந்திரவாயிலான் இயற்றும் பணி சிறந்ததெனவும் காட்டப்பட்டு வருகிறது. சுகாதார அவசியம் போதிக்கப்பட்டு வருகிறது. கல்வி, அறிவுப் பயிற்சி முதலியவற்றின் அவசியம் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

ஓர் காலத்தில் மிகவும் பிற்போக்கிலிருந்த ருஷிய விவசாய முறையை ஒழித்து, கவீன விவசாயிகளின் கல்விப் பெருக்கிற்கும், அறிவுப் பயிற்சிக்கும் வேண்டிய வசதிகள் அளிக்க காடெங்கணும் ஆயிரக்கணக்கான 'சிகப்பு மூலைகள்' (Red Corners) என அழைக்கப்படும் கிராமவாசகசாலைகளும், புத்தக நிலையங்களும் கிறுவப்பட்டுள்ளன.

அன்றைய ருஷிய கிராமம் 'கரடிக்குகை' எனவழைக்கப்பட்டது. ஏனெனின் மக்கள் மாக்கள் போன்று வதிந்து அஞ்ஞான அந்தகாரத்தில் ஆழ்ந்து பிற்போக்குற்றிருந்ததினால் தான். தன் குகையில் உறங்கும் காடியைப்போன்று தணல்மூட்டிய கணப்பின் அருகில் அரையாண்டிற்கதிகமாய் உறங்கி சமூக அரசியல், கிஞ்சிற்றும் பற்றில்லாதிருந்ததினால் தான்— இவை யாவுமின்றி பரிணாமம் பெற்று மாறிவிட்டன. குடியானவர்கள் இன்று சமூகத்தின் பிரதான கபராகியதன்றி வாழ்க்கைக் குரிய எல்லாத் துறைகளிலும் தலை சிறந்து விளங்குகிறார்கள். பல நூற்றாண்டுள் காட்டாரிடையும், ஏகாதிபதாரிடையும் நிகழ்ந்து வந்த வித்தியாசங்கள் அறவே அழிந்தன. இன்றளவும் ருஷிய காட்டின் பல மாகாணங்களில் காட்டுப்புறத்திற்கும், நகரங்களுக்கும் வித்தியாசம் காண்பதரிதாகிவிட்டது.

சோவியத் கிராமங்களில் ஓய்வும், உல்லாச வாழ்வும், அறிவுப் பயிற்சியும் ஓர் மாமூலாகிவிட்டது. பெரும்பாலான கிராமங்களில் மதத் திருவிழாக்கள் ஒழிந்துவிட்டன. புரட்சிக்கு முன்பிருந்தது போலில்லாமல் யாதா கோயில் மணியோசையும் ஒழிந்தது. இதற்குப் பதிலாக ருஷிய பட்டினத்தார்களைப் போன்று பட்டிக்காட்டார்களும் விடுமுறை நாட்கள் பல புதிதாகப் பெற்றனர்.

அவை, புரட்சியின் ஆண்டுவிழாதினம்; மேமாதம் முதல் தேதி; ஹார்வஸ்ட்'தினம் (Harvest day) முதலியனவாகும். இக்காலங்களில் ருஷியகிராமங்கள் ஒன்றில் சென்று எவ்வண்ணம் ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் ஆங்கு புதுவிழாகொண்டாடப்படுகிறது என்பதைக் கண்டோமேயானால் அது மனதுக்கு மிகவும் மகிழ்ச்சியையும், எழுச்சியையும் நல்குமோர் காரியமாகும்.

கொள்ளையும், களவும் ருஷியர்கள் பேர்பெற்ற கொலையும், விபச்சாரமும் ஆகிய பண்டைய முறையின் கொடுமைகள்

பலவும் வியப்புறுமாறு குறைந்துவிட்டன. இம்மாதிரியான குற்றங்கள் இகழின் கிராமவாசிகள் ஓர் பகிரங்க நீதி மன்றமாகக் கூடுகின்றனர்.

இந்நீதிச் சபைகள் மூலம் சம்மன்கள் கொடுக்கப்பட்டு தோழமையோடு விசாரணைகள் நடைபெறுகின்றன.

ஓய்வு காலத்தை கழிக்க கவீன ருஷியன் பல மாறான வழிகளைக் கண்டுள்ளான். ருஷிய கிராமங்களில் புதிதாய் நிறுவப்பட்ட கிளப்புகளில் காளையர் கூடுகின்றனர். இக் கிளப்புகளில் அரசாங்க செலவில் சங்கீதம், நடனம், நாடகம், சித்திரம், பல்வேறு வியாபார முறைகள், விளையாட்டுகள், உடற்பயிற்சி முதலியன பற்றி போதிக்கப்பட்டு வருகிறது. இக்கிளப் அங்கத்தினர்களைக் கொண்டும் கிராமாந்திர நாடக அரங்கங்களுக்கும, அமெசூர் நடிப்பிற்கும் நடிகள் தயாரிக்கப் படுகின்றனர. இக்கிளப்பில் நகரங்களிலிருந்து பேருரையாளர் கள் வந்து சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறது. கல்வியறிவு விருத்திக்கான சினிமாப்படங்கள் வர வழைத்துக் கிராமத்தில் காண்பிக்கப்படுகின்றன.

பல கிராமங்களில் ஆகாய விமானக் கிளப்புகளுமிருக்கின் றன. கிராம யுவர்களுக்கு இயந்திரமோட்டார் ஆரம்பப்பயிற் சியும் அளிக்கப்படுகிறது. பின்னர் இவர்கள் நகரங்களுக்கு அனுப்பப்பட்டு தங்களது பயிற்சியை முற்றுப் பெற்றுவர இலவசமாய் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

கோல்ஹாஸ் (Kolhoz.கூட்டுவிவசாயி அல்லது, குடியா னவர் சங்கம்) கூட்டங்களைப்பற்றிய விஷயம் மிகவும் ருசிகர மாயிருக்கும். இவர்கள் அடிக்கடி கிராமத்தில் கூடுவார்கள். பிற கிராம கோல்ஹாஸ் அங்கத்தினர்களை ஏதாவதொரு குறிப்பிட்ட கோல்ஹாஸிற்கு வரவழைப்பார்கள். விருந்து கள் நடத்துவார்கள்.

கூட்டுறவு விவசாய்களிடைஇப்பழக்கம் சமீபத்திலிருந்து தான் வெகு மலிவாக நிகழ்ந்து வரலாயிற்று. சாதாரணமாய் இக்கூட்டம் சில சொற்பொழிவுகளோடு ஆரம்பிக்கப்படுகின் றது. பெரும் புகழ் வாய்ந்த பிற கிராமத்து கோல்ஹாஸ் குடி யானவர்கள் தங்களது கோல்ஹாஸ் சபையின் வேலைத் திட் டத்தையும், அது ஆற்றிய பணிகளையும் எடுத்து விளக்குகின்

றனர். இதர கோல்ஹாஸ் கூட்டத்தார் இதைக்கவனித்து தங்கள் தங்களது கோல்ஹாஸ் செய்துள்ள சேவைகளைப் பற்றி வடுத்துக் கூறிக் காட்டுகினறனர். பிற்போக்கான கோல்ஹாஸ்களின் அபிவிருத்தியைப்பற்றி வாதப்பிரதிவாதங்கள் நிகழ்கின்றன. முடிவில் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டு கோல்ஹாஸ்களின் பரஸ்பர ஒற்றுமையை காடி சர்வ கோல் ஹாஸ் கூட்டுறவைத் தேடி உழைக்க பிரதிநிதிகள் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்.

வாதங்களும், இதர காரியங்களும் முடிந்தபின்னர், விருந் தாளிகள் ஆசனத்தமர்ந்து போஜன மருந்த அழைக்கப்படு கின்றனர். ஒரு காலத்தில் மிக விரும்பப்பட்டதும், விருந்திற் கே அத்தியாவசியமெனக் கருதப்பட்டதுமான சாராயமும் 'வோட்கா' எனும் விஸ்கியும் பெரும்பாலான விருந்துகளில் அறவே பஹிஷ்கரிக்கப்பட்டுவிட்டன. விருந்திற்குப் பிறகு 'அமெசூர்' சிற்பியும், பாடகனும், இசை வல்லுநனும் தங்கள் தங்கள் கலைத்திறனைக் காண்பிக்கின்றனர். பிறகு பித்தளை பாண்டு அல்லது ஹார்மோனிய பக்க வாத்தியத்தோடு கூடிய காட்டு கடனங்கள் கடைபெறுகின்றன. வெகு காலத்திற்குப் பிறகு ஐரோப்பிய கடனங்களும், 'பாக்ஸ் ட்ராட்', 'டாங்கோ', 'ரும்பா' முதலிய பலவகை கடனங்களும், மக்கள் உள்ளத்தை கவர்ந்தன. இன்று இவ்வகை கடனங்களையும்கற்றறிந்து வெகு சீக்கிரத்தில் முன்னேறி வருகின்றனர்.

கோல்ஹாஸ்யர்களிடை 'செஸ்' விளையாட்டும், கவீன விளையாட்டுகளாகியபுட்பால், டென்னிஸ், வாலிபால், ஹாக்கி, ஸ்கேடிங் ஸ்கிப்பிங் ஆகியவை சர்வசாதாரணமான காலப் போக்குச் சாதனங்களாகி வருகின்றன. தங்கள் 'டீம்'களைக் யும் கூட 'டீம்'களோடு விளையாடவும் அனுப்புகின்றனர்.

கவீன விளையாட்டுகள், கடனங்கள், வீட்டினுள் விளை யாட்டுகள் வெளி விளையாட்டுகள் (In-door and out-door) ஆகியவற்றின் வளர்ச்சி அராசாங்கத்தின் கண்காணிப்பிலேயே யிருந்து வருகின்றது. கல்வியதிகாரிகளிடம் இவைகளின் பராமரிப்பை ஒப்படைத்து கவீனகாகரீக வளர்ச்சிசகும், விளை யாட்டு முதலிய உல்லாசக் காலப்போக்கிற்கும் கிராமத்தார்க்கு வசதிகள்ளிக்கப்பட்டு வருகின்றன. இவை யாவும் வெற் றிக்கு நிரூபணமளித்தே வருகின்றன. குடியானவர்களின் காகரீகம் வியப்புறும் வண்ணம் மேலோங்கி வருகிறது. குடி

வகை ஆச்சரியப்படுமாறு ஓழிந்து வருகிறது. குற்றம் முதலி யன வெகு விரைவில் குறைந்து விட்டன.

மிகவும் பிற்போக்குற்றிருந்த ருஷிய குடியான மக்கள் தம் தம் பொறுப்பை யுணர்ந்து சமூக முன்னேற்றத்தையும், காட்டு வளனையும் நாடி யுழைக்கலாயினர்.

நகரத்தில் வாழ் மக்களைப்பற்றி கவனிக்கில் தங்கள் ஓய்வு நேரத்தைக் கழிக்கும் வகைகளில் சிலமாற்றங்கள் இருக் கின்றன. ஏழுமணிகாலம் வேலைசெய்த பிறகு தொழிலாளி களும், ஆபீஸ் காரியஸ்தர்களும் இராவுணவுண்டு, 7 மணி வரை களைப்பாறுகின்றனர். பிறகு 7-30 மணிக்கெல்லாம் பல்வேறு நாடகமேடைகளும், சினிமாக்கூடங்களும், கிளப்க ளும், பிரசங்க இல்லங்களும் நிறைந்து விடுகின்றன. ஓவ்வொ ருவரும் குறைந்தது வாரத்தில் இருதரமாவது இவைகளில ஒன்றிற்குச் சொல்லவேண்டும் என்பது நித்திய கடன்களில் ஒன்றாகும். மாதத்தின், 6, 12, 18, 24, 30, ஆகிய தேதிகள் ருஷியர்களுக்கு சுயேச்சையோடிருக்க வழங்கப்பட்டுள்ள நாட் களாகும். இத்தினங்களில் சில குறிப்பிட்ட தொழிற்சாலை களும், ஆபீஸ்களுமன்றி மற்றெல்லா காரியாலயங்களும் கடை பெறா. பகற்காலத்தில் நகரின் புறத்தில் மக்கள் கூடிக் குலாவுகின்றனர்; வனத்திற்சென்று அலைந்து திரிகின்றனர்; ஆற்றோரங்களில் காட்டிய ஆட்டம் நடத்துகின்றனர்: அல் லது பயிற்சி, ஓய்விற்கென அமைக்கப்பட்ட திடலிற்குச் செல் லுகின்றனர். இத்திடல்கள் மக்கள் ஓய்வு எடுத்துக் கொள்வ தற்கும், பயிற்சி பெறுவதற்கும் சோவியத் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டவைகளாகும்.

ருஷியாவில் ஒரு நாளைக்குத் தங்குவதற்கென விடுதிகள் பல இருக்கின்றன. வாரக்கடைசி காளிலிங்கு சென்று வெகு நிரமமான கட்டணத்தைச்செலுத்தி, ஊஞ்சல் அல்லது தொட் டிலில் ஆடலாம், அல்லது 'கொரோட்கி' (Gorodki) எனும் தேசிய ஆட்டம் விளையாடலாம். 'செகப்பு மூலைகள்' எனப் படும் கிளப்கள், புத்தகநிலையங்கள் ஆகியவற்றைப்போல் கண் காட்சி சாலைகளைக் கண்ணுறச் செல்வோரும் அதிகம்.

ஓர் வருஷத்திற்கு முன்புதான் அரசாங்கம் நகரத்தின் கைத்தொழில் அபிவிர்த்தி, விவசாயாபிவிர்த்தி, ஆகிய பிரச்சி னைகளிலும், சிற்றுண்டிச் சாலை, உண்டிச்சாலை, கடனசாலை ஆகியவைகளின் விர்த்தியைப்பற்றியும் கருத்துச் செலுத்தலா

கடவுளும், மந்திரமும் மெய்யா, பொய்யா ?

(ப. ஜகந்நாதன்.)

---

1. மண்டலத்தல் ளோர்கூடி வகுத்தகற் பணிபோல்ந்த
அண்டமு மொருவனாலே யானதாய் நூற்கள் செய்தார்
பண்டவன் றன்னையார்தான் படைத்தவ னவனை
[முன்னோர்

கண்டிட விளங்கநூலில்காட்டிடா தொளித்ததென்னே.

2. உன்னுடல் தனிலே தெய்வம் உண்டெனில்
[பாண்டுகுட்டம்
இன்னுமோ ரனந்த நோய்கள் இசைந்துகின்
[றிடுமோகின்றால்
பின்னுமவ்வுளத் தேநின்று பெருமைகொள்
[வானோயீசன்
மன்னுயிரிதனைச் சற்றும்மனங்கொளா
[திருத்தலென்னே.

னார்கள். இன்று இத்துறைகளில் அரசாங்கத்தின் பணிகள் பலவும் வெற்றிகரமாகவே முடிக்துவிட்டன. மாஸ்கோ, லெனின்கிராட் போன்ற நகரங்களில் என்றும் குன்றாவளன் நிலை காட்டிய சகாப்தத்தை இன்று ருஷிய அரசாங்கம் ஸ்தாபித்துவிட்டது. இன்று இந்நகரங்களில் எண்ணிறந்த சிற்றுண்டி சாலைகளும், சாப்பாட்டு விடுதிகளும், கடனசாலைகளும் ஏற்பட்டுவிட்டன. இவ்விடங்கள் மக்கள் சென்று தாங்கள் ஓய்வு நேரத்தைப் போக்க வசதியாக அமைத்துள்ளன.

குடிகாரன், கூத்தியாள், பிச்சைக்காரன் என்பது சோவியத் ருஷியாவில் வெகு அபூர்வமே என்பது மிகைப்படுதலாகாது. மக்கள் தங்கள் ஊதியத்தை வேறெவ்வகையாலும் இன்றி கண்ணிய, கௌரவ உழைப்பினாலேயே தேடிக்கொள்ளும் வண்ணம், சோவியத் குடிகளின் கல்வித்துறையும் பொருளாதாரத் துறையும் அவ்வளவு முற்போக்கிற்கு வந்துவிட்டன.

---

3. உன்னுளத் தறிவேதெய்வம் உற்றுநோக்
[கென்றுசொல்வார்
தன்னுளத் திருந்தவாய்வு தாண்டிடி லறிவுதானும்
பின்னுமவ் வுளத்தேகின்று பேணியொன்றுங் காணாது
நுண்ணறி வழிந்துபோன நுட்பநீ யறியாதென்னே

4. கொற்றவனொருவ னொருமனையைக்
குறித்துச்செய்து பின்னழிக்கான்
எத்தேவரையும் முருக்களைளையும்
ஏதுக்கமைத் தானேனழித்தான்
பித்தோ அவனைப் பெருமைபேயோ
பிடித்தோ படைத்துப் பிழை செய்தான்
சற்றே யதனைப் பகுத்தறிந்தால்
சகத்தினியல்பு வெளியாமே.

5. சிறந்த வுயிர்தனை யொருவனழுப் பவந்து
செனித்ததென நூலனந்தம் செய்தார் முன்னோர்
பரந்த புவிதனைத்தேடித் தடாகஞ் செய்து
பாங்கான புனல் நிரப்பிச் சிலநாட் சென்றால்
நிரந்தரமா யடர்ந்த சத்துத் திரண்டங்காங்கு
நீங்காத வூர்வனவாம் சீவர்கோடி
தாந்தாமா யியல்பாய் வந்துதிக்குமல்லால்
தானொருவன் படைத்தன்ற தகமை பொய்யே

6. குயவன் செய்திடும் பாண்டத்திலே பல
குற்றமுண்டாகி யிருந்த தென்றால்
நிசமறி யாமல் பாண்டத்தைத் தண்டிப் போர்
நீணிலத் துண்டோடி ஞானப் பெண்ணே.

7. நிச்சயம் பாண்டத்திற் குற்றமுண்டாகிடில்
நேர்செய் யவந்தக் குச வனுக்கு
சிட்சை கொடுத்து விடாமற் புகழ்பவர்
சென்ம வஞ்ஞானி ஞானப் பெண்ணே.

8. குறும்பை யாடொன்று கூட்டத்திலே நின்று
குதித்தன் கோர்புறம் ஓடக் கண்டால்
மறுத்துப்பாராமல் மற்றது மோடிய
மார்க்கம் போலாச் சுது ஞானப் பெண்ணே.

9. கையில்லை காலில்லை ரூபமில்லை உற்றுக்
காண நிறம்பே ரொன்று மில்லை
மெய்யுண் டெனப்பா ராமற் புலம்புதல்
மெத்த வஞ்ஞானம் ஞானப் பெண்ணே.

10. ஆனவுருவை யழித்தி டலாமொன்றை
அமைக்குந் தேவர் களில்லை யென்று
ஞான முற்றவ ரொப்புவர் மற்றவர்
நம்பா ரஞ்ஞானம் ஞானப் பெண்ணே.

11. மந்திரத் திற்குயி ரிருந்தால் நடந்திடாதோ
மாறியெங் குந்திரியாதோ மறைந்திடாதோ.
எந்திர மொன்றெழுதி வைத்த திங்கிருக்க
ஏவிவிட்டே னென்றுரைப்பாரெங்கே போச்சு
இந்திரன் போல் வேடமிட் டுக்கதறினாலும்
என்ன பல னனுவசையா யெவரானாலும்
தந்திரத்தாற் செய்வதல் லாலுலகிலுள்ளோர்
தற் செயலாய் வரவழைப்ப தொன்றுங் காணேனே

12. வாதமுத லஞ்சனங்கள் வசிய மீடு
வளமான தெய்வ மந்திர முண்டென்றும்
மாதவரும் முனிவர்களும் செய்த நூலரல்
மனமயங்கி வாழ்நாளும் பொருளுந் தேய்த்து
சாதகமாய் செய்து பலன் கைகாணாமற்
சண்டாளர் சொற்கேட்டுப் பலருங் கெட்டு
பேதமையாய்ப் போனதன் றியந்நூல் பார்த்துப்
பிழைத்த துண்டோ பேருலகில் பேணிப்பாரே.

13. மையென்றை யுண்டுபண்ணிததி ல்தமிட்டு
மயக்கவே திரிவார்க ளனந்தம் பேர்கள்
கைகொண்டு கடிவாள மிட்டாற் போல
கருதியவன் சொன்னபடி யெல்லாம் கேட்டுப்
பைகொண்ட பொருளை யெல்லாங் கொட்டித் தந்து
பக்தியுடனே கடந்து பரிந்து கேட்க
செய்கின்ற படி கடக்க திலதம் செய்வோர்
தெருத் தோறு மூழியங்கள் செய்வதேனோ.

சனாதன மதக் கடவுளின் ஆட்சி.

(தோழர் குமாரசாமி.)

இடம்:—பரலோகம் கடவுள் தர்பார்.

பாத்திரங்கள்:—கடவுள், சித்ராபுத்ரன், யமன், ஞான சாகரன், பந்தரத்தனம்.

காலம்:—ஊழிகாலம்.

I

கடவுள்:—அடே! சித்திரபுத்திரா! என்ன தாமதம். இன்றைய கணக்கென்ன?

சித்திரபுத்திரன்:—சர்வலோகப் பிரபு! சர்வஞானப்பிரபு! சர்வவல்லபா! கருணாநிதி! காயேன் தங்களாக்ஞையையேஎதிர் பார்த்திருக்தேன். (யமனைப்பார்த்து சமிக்கை செய்கிறான்.)

யமன்:— (மானிடர் இருவரை அழைத்துவந்து தர்பார் முன்னிலையில் நிறுத்தி) "சுவாமி உத்திரவுப்படி கடத்துகொண்

---

14. வாதமஞ்சன மீடாடு கரு
வசிய சூனிய மாரணங்கள்
ஏதம் பலவகை தெய்வமும் சுத்தமாய்
இல்லவே யில்லை ஞானப் பெண்ணே.

15. பில்லி சூனியத்திற் கொல்ல லாமெனில்
பீரங்கி குண்டுகள் கத்திகளேன்?
வல்லமையுள்ள சேவக ரேனிந்த
மண்ணாளு வோருக்கு ஞானப் பெண்ணே

16. கண்டபடி யென்னைத் திட்டாதீர்
கல்லா லெறியத் துணியாதீர்
காரணமாக நியாயத்தைக் கேட்டென்னைக்
காவலில் வையுங்கள் ஞானப் பெண்ணே.

டேஷ்" என்று ஓதுங்கி குனிந்து வாய்பொத்திக் கைகட்டி நிற்கிறான்.

சித்திரபுத்திரன்:—(கடவுளை நோக்கி) இன்றைய கணக்குப்படி இவ்விரு மானிடர்களும் விசாரிக்கப்படவேண்டியவர்கள்.

கடவுள்:—சரி, விசாரி.

சித்திரபுத்திரன்:—(ஞானசாகரனை நோக்கி) இப்படிவா, உன் நாமதேயமென்ன?

ஞானசாகரன்:—என் நாமமும், தேயமும் தங்கள் கணக்கில் இருக்குமே.

சித்திரபுத்திரன்:—சீ! கேட்டகேள்விக்கு பதிலிறு. இது பூலோக கோர்ட்டல்ல என்பதை ஞாபகத்தில் வை.

ஞானசாகரன்:- இது பூலோக கோர்ட்டாயிருந்தால் என் நாமதேயத்தை சொல்லித்தான் தீரவேண்டும். ஆனால் தங்கள் சமூகத்திற்கு முற்காலம், நற்காலம், பிற்காலம் எல்லாம் தெரிந்திருக்கும். என்று நினைத்தேன்.

சித்திரபுத்திரன் சீ! அதிகப்பிரசங்கி! வாயை மூடு. கேட்டகேள்விக்கு பதில் சொல், இல்லாவிட்டால் பார் அங்கே (யமனைச் சுட்டிக்காண்பிக்கிறார். யமன் உதட்டை மடக்கி நாக்கைக் கடித்துக்கொண்டு கதாயுதத்தை எடுத்து சுழற்றிக் காட்டி ஞானசாகரனைப் பயமுறுத்துகிறான்.)

சித்திரபுத்திரன்:- (மறுபடியும்) உன் நாமதேயமென்ன?

ஞானசாகரன்:—என் பெயர் ஞானசாகரன்.

சித்திரபுத்திரன்:—எந்த தேசம்?

ஞானசாகரன்:--ஆப்கானிஸ்தானத்திற்கும், பெல்ஜிஸ்தானத்திற்கும் மேற்சேயுள்ள இந்துஸ்தானத்திற்கு தெற்கேயிருக்கும் ஆராய்ச்சிஸ்தானம் என் தேயம்.

சித்திரபுத்திரன்:—உன் ஊர் எது?

ஞான:—ஞானபுரி.

சித்ர:—உன் மதம் என்ன?

ஞான:—சுயமரியாதை.

சித்ர:—அதன் கொள்கைகளென்ன?

ஞான:—எவனும் தன்னை மற்றவனைவிட பிறவியில் தாழ்ந்தவனென்றோ உயர்ந்தவனென்றோ மதிக்கக் கூடாது. தன்னைத் தாழ்ந்தவனென்று நினைத்தல் தன்னைத்தானே இழிவு படுத்திக்கொள்வதாகும். மற்றவனைவிட தன்னை உயர்ந்தவனென்று நினைத்தல் பிறரை இழிவு படுத்துவதாகும். அதாவது சமத்துவம், சகல சொத்தும் எல்லோருக்கும் சம சுதந்தரம் உண்மை விளக்கல், அனைத்துயிர் ஒன்றென்றெண்ணல், அறும்பசியெவருக்கும் ஆற்றல், மனத்துளபோதாபே தம் வஞ்சம், பொய், சூது சினம் ஆகியவற்றை தவிர்த்தல்.

சித்ர:—உன் மதத்தின் கடைசி லக்ஷியம் யாது?

ஞான:-மக்களில் எந்த ஜீவனுக்கும் யாதொரு கெடுதியும் செய்யக்கூடாது. எல்லா ஜீவன்களுக்கும் உதவி செய்யவேண்டும்.

கடவுள்:—அப்படியா சமாச்சாரம் (ஞானசாகரனை மேலும் கீழும் பார்த்து) இருக்கட்டும் உன் காலக்ஷேபம் எப்படி?

ஞான:—உடலைக்கொண்டு மனதார உழைத்து கல் வழியில் சம்பாதிப்பது. அதை காணும் என் குடும்பத்தாரும் சந்தோஷமாய் உண்டு ஆனந்தமாயிருப்பது.

கடவுள்:—உன் வாழ்க்கைக் கடனையெல்லாம் கிரமப்படி கடத்திவந்திருக்கிறாயா?

ஞான:—என் வாழ்க்கையில் நான் கடன் படவில்லை.

கடவுள்:— எப்போதாவது திருடினதுண்டா? பொய் சொன்னதுண்டா? பொய் கையெழுத்திட்டதுண்டா?

ஞான:—இல்லை! இல்லை!! இல்லவே இல்லை!!!

கடவுள்:—சிரார்த்தம் முதலிய சடங்குகளையும், வருணாசிரம தருமங்களையும் அநுசரித்து வந்தாயா?

ஞான:—அதைப்பற்றி நான் ஒரு சிறிதும் கவலை கொண்டதே இல்லை.

கடவுள்:—அப்படியா! நீ அவைகளைக் கிரமமாய்ச் செய்யில்லையா?

ஞான:—ஒரு காளாவது அதைப்பற்றி நினைத்ததேயில்லை.

கடவுள்:— எமமிடத்திலாவது சரியாய் பக்தி செலுத்தி அபிஷேகம், பூஜை, உற்சவம், கை வகையாக்களைச் சரியாய்ச் செய்து வந்தாயா?

ஞான:— அதுவும் இல்லை. உங்களைப்பற்றி எண்ணவே எனக்கு கோமில்லை. கஷ்டப்படவும், சம்பாதிக்கவும், அவைகளை ஏழைகளுக்கு உதவவும், மீதி நேரங்களில் மற்ற ஜீவன்களுக்கு உழைக்கவுமே சரியாய் இருந்தது என் வாழ்காள்.

கடவுள்:— அப்படிப்பட்டவனாநீ !சடங்குசெய்யவில்லை! வருணாசிரம தர்மப்படி கடக்கவில்லை! எமையும் பக்தி பூசை முதலியவை செய்யவில்லை! சண்டாளனாகி விட்டாய்! எம தர்மா! இவனை மீளாநரகில் தள்ளு.

II

கடவுள் (மற்றொருவனைப்பார்த்து) ஹே! நானே! உன் பேரென்ன?

நான்:— பக்தரத்னம்.

கடவுள்:— உன் மதமென்ன?

பக்தரத்னம்:—கடவுள் சர்வ வல்லமையுள்ளவர், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதோடு சதா சர்வகாலம் கடவுளை நினைத்துக்கொண்டு அவருக்கு பூஜை உற்சவம் செய்வது.

கடவுள்:—சந்தோஷம்! உன் தொழில் என்ன?

பக்த:— என்ன வேலையாவது செய்து பணம் சம்பாதிப்பது.

கடவுள்.— அப்படி என்னென்ன வேலைசெய்தாய்?

பக்த:—நன்றாய்த் திருடினேன், போலீசு உத்தியோகம் செய்து லஞ்சம் வாங்கினேன், வேலை போய்விட்டது. என்றாலும் பிறகு வக்கீல் வேலை செய்தேன். வியாபாரம் செய்து வியாபாரத்தில் மக்களை ஏமாற்றிக் கொள்ளையடித்தேன்.

லேவாதேவி செய்து, கொள்ளை வட்டி வாங்கி பொய்க்கணக் கெழுதி ஊரார் பொருள்களை கன்றாய் அபகரித்தேன்.

கடவுள்:— அப்படி எவ்வளவு சம்பாதித்தாய்?

பக்த:— லக்ஷக்கணக்கிலிருக்கும்.

கடவுள்:— பணத்துடன் இன்னும் ஏதாவது சம்பாதித்ததுண்டா?

பக்த:— பக்கத்து வீட்டான் பெண்டாட்டியையும் நான் அடித்துக்கொண்டு வந்து என் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டிருந்தேன். அதனாலும் எனக்கு வருமபடியுண்டு.

கடவுள்:— உனக்கு சொந்த மனைவி மக்கள் இல்லையா?

பக்தன்:— ஆம் உண்டு.

கடவுள்:— நீ அவர்களைக் கை விட்டுவிட்டால் அவர்களுக்கு யார் துணை?

பக்தன்:— அவர்களை நான் கைவிடவில்லை. அவர்களைக் கொண்டு தான் நான் உத்தியோகம் பெற்றது. அவர்களை உபயோகித்துத்தான் பணமும் சம்பாதித்தேன்.

கடவுள்:— அத்தப் பணத்தையெல்லாம் என்ன செய்தாய்?

பக்தன்:— காசிக்குப்போனேன், கன்கையில் மூழ்கினேன், ஆயிரம் பிராமணருக்கு அன்னதானம் செய்தேன், விக்கப் பிரதிஷ்டை செய்தேன். கடவுளுக்கு லக்ஷதீபம் ஏற்றி வைத்தேன், பிதுர்க்கள் சடங்கு முதலிய வைகள் கிரமமாய்ச் செய்து வந்தேன், என் வருணப்படி நான் உயர்ந்த ஜாதியானாகவே இருந்து வந்தேன், யாரையும் தொடமாட்டேன், கீழ் ஜாதியான் சாவதாயிருந்தாலும் ஒரு முடக்கு தண்ணீர் கொடுத்துப் பாவியாகமாட்டேன், சதா தங்கள் ஞாபகமே.

கடவுள்:— ஓ! எம்மைத் துதித்தாய்! எம்மை நம்பினாய் எனக்கு பக்திசெலுத்தினாய்! மிக்கசந்தோஷம்! முதலையுண்டபாலனை அழைத்தது, குதிரைபைக்கூடிபாயசம் பருகிய கௌசலையின் கர்ப்பத்துக்குள்யாம்புகுந்துகுழந்தையாய்(ராமனாய்) பிறந்தது, இறந்துபோன ஜலந்தராசூரன் சவத்துக்குள் புகுந்து அவன்பத்தினியை ஏமாற்றிப்புணர்ந்தது முதலியனமது திருவிளையாடல்கள் உனக்குத் தெரியாதா?

காட்சி.

(ஜே. பி. கிருஷ்ணன்.)

கந்தன் பெண் பித்துக்கொண்ட இளைஞர் கூட்டத்தைச் சேர்ந்தவனன்று. அவன் அறிவும், ஆற்றலும், ஸ்திரபுத்தியும் படைத்த வாலிபன். அவனது நோக்கம்—கொள்கை உயர்வானது, விசாலமானது.

குமுதினி பலவித உபாயங்களைச் செய்தாள் கந்தனை வயப்படுத்த! எல்லாம் வீணாயிற்று. கொஞ்சம் "ஸ்குருலூஸான" வாலிபனாயிருந்தால், சில மாதங்களுக்கு முன்பே கதை வேறு மாதிரியாக முடிந்திருக்கும். ஆனாலும் குமுதம் இன்னும் விட்டபாடில்லை. "முயற்சிதன்மெய் வருத்தக் கூலி தரும்" என்பதில் அவளுக்கு மிகுந்த நம்பிக்கை, பாவம்! குமுதினி தான் என்ன செய்வாள்? அவள்மேல் குற்றமில்லை, உலகத்தையறியாதவள்!

மதிவதனம், கட்டமைந்த உடல், கனிந்த பார்வை, இனிக்கும் பேச்சு, இனியகுணம் இவ்வித பல சிறப்புக்களைப் பெற்றவள் குமுதினி. அவள் வயது 16. ஆனால் அவளுக்கு வாய்த்த கணவன் ஒரு கிழவன்! வாழ்க்கையில் ஊறும் இன்பத்தைப்பற்றிக் கேட்கவேண்டுமா? ஒரு பக்கத்தில் மூர்க்கமான இளங்காளை, மற்றொருபக்கத்தில் சாகப்போகும் கிழட்டுமாடு. வண்டி எவ்வளவு நேர்மையாகச் செல்லும்! என்ன நியாயமான,—பொருத்தமான ஜோடி!!

பக்தன்:—ஆம் பிரபு நன்றாய்த் தெரியும். தங்களிடம் என் நம்பிக்கையையும், இன்னும் அதிகமான பக்தியையும் காட்ட இவைகளைவிட இன்னும் பெரிய புராணங்கள் இல்லையே என்று வருத்தமும் பட்டேன்.

கடவுள்:—மெச்சினோம்! மெச்சினோம்! ஹே! சித்திரபுத்திரா! இந்த பக்தனை நமது சொர்க்கத்திலேயே இருத்தி அப்ஸரஸ்திரீகளைக் கொண்டுவந்து விடு, சுகமாய் இந்தமோக்ஷத்தை அனுபவித்துக்கொண்டிருக்கட்டும்; அவன் ஆசை தீர்ந்தபிறகு மறுபடியும் நானாப்பிறந்து மேற்கண்ட கற்கருமங்களை இதுபோல் நம்மை வந்தடையட்டும்.

சாமிநாதய்யருக்கு வயது 56. குழந்தினிக்கு வயது 16. மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம், சமதர்மத்திற்கும், காங்கிரசுக்குமுள்ள வித்தியாசம்! ஆம்! பட்டுப்போன மரம் தளிர்க்குமா? குழந்தினி எதிர்பார்த்த இன்பம் அந்தக் காய்ந்துப்போன உடம்பில் இல்லை. அவள் நெஞ்சம் குமுறாது என்ன செய்யும்? அவள் மனம் கலங்காமல், அறிவு சிதறாமல் எப்படிதானிருக்க முடியும்? அவள் ஒரு யுவதி! இன்ப நுகர்ச்சி வினையும் பருவத்தினள்.

(2)

வக்கீலாகவும், தேசத்தொண்டராகவும், தேசபக்தராகவுமிருந்து என்னென்ன வெல்லாமோ ஆகி, இப்பொழுது அந்திய காலத்தில் "பிரைவேட்" வாத்தியாராக விளங்குகிறார் சாமிநாதய்யர். தன்வீட்டிலே ஒரு இரவுப் பள்ளிக்கூடம். யையன்களுக்கும், வயது வந்தவர்களுக்கும், ஆங்கிலம் தமிழ், சமஸ்கிருதம் முதலிய பாஷைகள் கற்பிக்கிறார். அதுவும் வருமபடியோடுதான், சும்மாவல்ல!

அக்கிராமத்தில் அவரிடம் படிக்கும் பெரிய பையன்களில் கந்தன் ஒருவன்; அவன் ஆங்கிலம் பயிலுகிறான். கந்தனின் விசேஷ குணங்களைப்பற்றி நாம் வருணிக்க வேண்டியதில்லை. ஒரு நல்ல மனிதனுக்கு வேண்டிய அறிவு, அழகு, ஆண்மை, அன்பு, இவைகளைப் பெற்றிருந்தானென்றால் போதுமானது.

கந்தன் சாதியில் முதலி. பெற்றோர்கள் ஏழைத்தொழிலாளர், அவனுக்கு வயது 22, அவனும் ஒரு தொழிலாளியே. தமிழில் பாண்டித்யமுடையவன். ஆங்கிலம் பயிலவேண்டுமென்பதில் அளவற்ற பிரியம்! ஏழைக் கந்தனுக்குக் கல்வி எதற்கு? அவன் படித்து என்ன செய்யப் போகிறான் என்று கேட்பது புத்திசாலித்தனமல்ல.

சாமிநாதய்யர் பிரபல தேசீய வாதியாகத் திகழ்ந்தகாலத்திலே, பத்திரிக்கைகளில் அவர் பெயர் கொட்டையெழுத்துக்களில் விளம்பரம் பெற்ற காலத்திலே, காட்டில் அவருக்கு கல்ல செல்வாக்கு, காங்கிரஸ் பொதுநிதியின் அருள் நோக்கு! காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டார் அய்யர். தற்கால தேசியத்தலைவர்களைப்போன்று களவாடப்பட்ட நிதிகளுக்கு

வகை சொல்லாமல், தேள் கொட்டிய திருடர் களைப் போன்று விழிக்கும் ''துர்ப்பாக்கியம்'' அவருக்கு ஏற்படவில்லை. அந்த வகையில் அய்யர் தப்பித்துக்கொண்டார். தற்போது அவர் ஒரு மாஜி காங்கிரஸ் தலைவர். நிற்க,

அய்யர் தாரமிழந்தவர், பிள்ளை குட்டிகளும் அதிகமில்லை; பெரிய பையன்கள் இருவர் சென்னையில் படிக்கின்றார்கள்; நிம்மதியான பேர்வழி. பணச் செறுக்கு இருந்தாலே உடம்பு ''பசபச''வென்று தானிருக்கும்.

ஒரு தர்மபத்தினியின்றி அவரால்வாழ்க்கையை கடத்திச் செல்ல முடியவில்லையாம்! பணத்தை அள்ளிக்கொடுத்தால் கல்லபெண் தானா கிடைக்காது? அறிவற்ற மனித சமூகத்திலே பணத்தைவிட பெண் பெரியதா என்ன? குழுதினியின் விலை ரூபாய் 2000. அவளுக்கணிவித்த ஆபாணங்கள் ரூபாய் 1500. கலியாணத் தரகர் சிலவுவேறு. ஆடுமாடுகளை விலைக்கு வாங்குவதைப் போலத்தான். ஆனால் அதற்குப் பெயர் ''வியாபாரம்'' இதற்குபபெயர் ''விவாகம்'' அவ்வளவுதான் வித்தியாசம்.

குழுதினி, அய்யருக்கு வாழ்க்கைப்பட்டு இன்றைகு நான்கு வருஷம். அவள் மணமாவதற்கு இரண்டுவருஷ முன்பே பூப்படைந்தவள்! எனினும் பிராமண தர்மத்தைக் காப்பதற்காக அந்த விஷயம் மறைத்து வைக்கப்பட்டது! அக்காலையில் அவள் என்னென்னமோ நினைத்துக் கொண்டிருந்தாள். மணந்த புருஷனோடு அப்படியெல்லாமிருப்போம், இப்படியெல்லாமிருப்போம், என்று மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தாள். அவையெல்லாம் ''கடவுள் நம்மைக் காப்பார்'' என்பதைப் போல வெறும் அர்த்தமற்ற நம்பிக்கையாய் விட்டன. பணப்பித்துக் கொண்ட பெற்றோர்கள் தன் வாழ்க்கையில் விஷத்தைக் கலந்து விட்டதை அவள் உணரத்தான் செய்தாள். என்ன செய்ய முடியும்? பெற்றோர் வாக்கை மீறுவது பாவமல்லவா? தன் வாழ்வு அடியோடு நாசமானாலும் பெற்றோர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதன்றோ மக்கள் கடமை! அதுவன்றோ மதக்கட்டளை என்று கற்பிக்கப்பட்டிருக்கிறது!

(3)

அனியாயம்! ஒரு காளேனும் புருஷ இன்பத்தை சரிவர அனுபவிக்கவில்லை குழுதினி. அவள் உணர்ச்சியற்றபதுமை

யல்ல, இல்லறப் பற்றழிந்த துறவியல்ல. உடற் செழுமையும், இன்பப்பற்றும், வாய்ந்தவனிதை. எனவே அளது குமரிமனம் ஒரு வாலிபனைப் பற்றுவதில் வியப்பொன்று மில்லை. அது இயற்கையின விளைவுதானே!

கந்தன் குழுதினியின் குறிப்பறிந்தான். அவள் பேச்சு, பார்வை, அணபு, உபசாரம், இவைகளின் அர்த்தம் தெரிந்தது. மனக்குழப்பம்! சற்றுதயங்கினான். என்னவானாலும் படிப்பை நிறுத்தலாகாது, விபரீதம் ஒன்றும் விளையவும் கூடாது. அவன் அறிவாளி, படிப்பதற்கு எல்லாரும் வந்த பின்னர் தான், அய்யரின் வீட்டுசகுள் நுழைவான். அந்த விஷயத்தில் வெகு ஜாக்கிரதை. அப்படியிருந்துங்கூட குழுதினி எப்படியாவது அவனைச் சந்தித்து விடுவாள். தினம ஒருமுறையாவது அவனோடு பேசுயே தீருவாள். பெண்கள் மனது வைத்தால்! .....

அன்று இரவு 8 மணியிருக்கும், பால்டோன்ற நிலவு, தேன்துளிக்கும தென்றல், எங்கும் கிசப்தமே குடிகொண்டிருந்தது.

சாமிநாதய்யர் ரஸ்தாவில் வேகமாக நடந்துக் கொண்டிருக்கிறார், அவர் குழுதினியை மணந்ததிலிருந்து இரவுகாலங்களில் வெளியூரில் தங்கினதில்லை, தங்கப் போவதுமில்லை! அவர் மண்டை வெடித்துவிடும்! பெண்கள் சபல புத்தி படைத்தவர்களாம்! அவர் ஒரு சந்தேகப் பிராணி!

தான் ஒரு அவசரவேலையாக பக்கத்து கிராமத்திற்குச் சென்றது சிலபையன்களுக்குத் தெரியாது. பள்ளி கோர்த்திற்கு முன வந்து விடலாமென்பது அய்யரின் கம்பிக்கை; ஆனால் பள்ளி நேரந்தாண்டி விட்டது. பையன்கள் வந்து வந்து பார்ப்பார்கள். வீட்டில்குழுதினிஒருத்தியே இருப்பாள். அவள் ஒரு "வயதுவந்த பெண்" "அந்த" இனபத்திலேமனத்திருப்தியின்றிஏங்கி நிற்பவள், பையன்களும் ஒன்றுமறியாத சின்னக்குழந்தைகளல்ல! ஐயையோ! அய்யரின மனசு துடித்தது! தேகம் படபடத்தது. முகத்திலே வியர்வை முத்துக்கள் அரும்பியன; கால்கள் ஆகாயத்தில் பறப்பதேபோன்றுபறந்தது ரஸ்தாவில்!

(4)

வீட்டின் கதவு சாத்தப்பட்டிருக்கிறது. ஏதோ பேச்சுக்குரல்! கதவோரத்தில் பதுங்கிக் கொண்டு காதைத் தீட்டிக்

கொண்டார் சாமிநாதய்யர். அவர் நெஞ்சு "படக் படக்" கென்று அடித்துக்கொண்டது.

"வாஸ்தவந்தான், அந்த நீதிகள் எனக்கும் கூடத்தெரியும், ஆனாலும் வாழ்வுக்கே உபயோகமற்ற ஒரு கிழவனுக்கு என்னைப் பெண்டாக்கி, வாழ்க்கையில் இன்பமின்றிச் சித்திரவதை செய்வது நீதியாகுமா? இது மனிததர்மமா? என்கதி என்ன?"

"குழுதம்! அதை நான் மறுக்கவில்லை. உண்மைதான், உன்போன்ற எத்தனையோ பெண்களின் வாழ்வையே குலைக்கின்றது நமது மதாச்சாரம்! ஜாதியபேதமும், பணக்கொழுப்பும் உள்ளவரை இது நிற்காது. உனக்காக நான் வருந்துகிறேன் என்றாலும் அந்த மதிரி காரியத்தில் ஈடுபட நான் தயாராக இல்லை"

"என் ஆயுள்முழுதும் இப்படியே இன்பமின்றிச்சாக வேண்டுமா? நான் பாவி! ஐயோ! என்னால் முடியவே முடியாது! எனக்கு விமோசனமில்லையா? நானும் உம்போன்ற மனித வகுப்பைச் சேர்ந்தவள் தானே! உமக்கு நெஞ்சிரக்கமில்லையா?"

"குழுதமே! அந்த பாரத்தை என்மேல் போடாதே. அதற்கு நான பொறுப்பாளியல்ல. பிரம்மாவின் முகத்தினின்றும் குதித்த உங்கள் "உயர்வான" பிராமண சமூகத்தைக் கேள். மனித வர்க்கத்தைச் சுட்டெரிக்கும் பழக்கங்களை, நீதிகளைப்புகட்டிய மதாச்சாரியர்களைக்கேள். அவர்கள் பதிலளிப்பார்கள்., குழுதம்! நான் உன்னை ஏற்றுக்கொள்வது பாவமான காரியமென்று நினைக்கவில்லை. ஆனால் நான் கௌரவமாக ஒரு பெண்ணைக் காதலித்து, மணம் செய்துகொண்டு வாழ நினைக்கிறேன். காதல் மணத்தில் எனக்கு மிகுந்த பிரியம்! மன்னிக்கவேண்டும், தயவுசெய்து எனக்கு வழிவிடு ரஸாபாஸமான காரியத்தை நான்விரும்பவில்லை"

"ஐயோ! அந்த கௌரவமான மணப்பெண்ணாக நானிருக்கக் கூடாதா! எனக்கு அந்த யோக்கியதையில்லையா? அன்பரே! இதோ மனதை விட்டுச் சொல்லுகிறேன். என் வாழ்வும், தாழ்வும் உங்களுக்கே சொந்தம், என்மேல் காதல் கொள்ளுங்கள், உங்கள் அன்பார்ந்த மனைவியாக நானிருக்கிறேன், கல்யாணம் தகுந்த முறையில் செய்துக்கொள்

வோம். அன்பே ! உண்மையில் என் மனப்பூர்வமான கோக்கம் இதுவே. இந்தக் கிழவனைப் பற்றிக்கவலையில்லை. இப் பொழுதே உங்களோடு வந்து விடுகிறேன், என்னிடம் போது மாண பணமிருக்கிறது. நீதி கிடைப்பதற்குக் ''கோர்ட்டிருக் கிறது. நம்மை யாதரிக்கச் சுயமரியாதை இயக்கமிருக்கிறது. சாம் கலப்புமணைத் தம்பதிகளாக வாழலாம், தயை செய்யுங் கள்'' .....

''ஐயோ ! பதிலில்லையா ! அப்படியானால் நான் அழிந் துபோக வேண்டியவள்தானா ? என்துரையே ! இதோ உங் கள் பாதமே கதி ! நீங்கள் என்னை எப்படிச் செய்தாலும் சரி ! இந்தச் சரீரம் உங்களுடையது'' ''ஐயையோ ! குழுதம் இதென்ன விபரீதம் !''

அய்யரின் காதை கும்மென்று என்னமோ அடைத்தது. மனம் உப்பி வெடித்து விடும்போலாகிவிட்டது ! இனிப் பொ றுக்க முடியாது. ஆவேசத்தோடு கதவைத் தள்ளினார், அது தாழ்ப்பாள் போடப்படாமலிருந்ததால் திடீரென்று திறந்துக் கொண்டு அய்யரை வரவேற்றுக் கீழே உருட்டித் தள்ளியது; அய்யர் நிலத்தைத் தவ்வினார் !

சட்டெனத்தட்டுக் கெட்டுத் தடுமாறி எழுந்தார் அய்யர். அவர்கள் இவரை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை ! என்ன ஆச்சரியம் ! அவர் கண்களைக் கசக்கிக்கொண்டார், பார்த்தார் அந்தக் காட்சியை ! அந்தோ ! அனலில் விழுந்த புழுவெனத் துடித்தார், உடம்பு கடகட வென்று ஆடிவிட் டது !

தன்னருமைச் சிறுமனைவி ''சூத்திரனா'' கிய கந்தனின் பாதத்தடியில் வீழ்ந்து, அவன் கால்களைக் கட்டிக் கொண்டி பதையும், கந்தன் கண்களில் கண்ணீர்கதித்தெழுந்து கன் னத்தின் வழியே உருளுவதையும் அய்யர் கண்டார் ! தன்பசை யற்ற கண்களால் !

சங்கீதத்தாலும், நாட்டியத்தாலும் ஏற்படும் தீமை.

(டாக்டர் தோழர், முத்துலட்சுமி ரெட்டியம்மையார்).

படைக்கப்பட்ட படைப்புமுழுவதிலுமே, அழகும், வர்ணமும், கீதமும், இசையும், ஒழுங்கும் நிரம்பியிருக்கின்றன. பகுத்தறிவு படைத்த மனிதன் முதல், ஊர்ந்து செல்லும் புழுவரையில் சகல ஜீவராசிகளுமே, சங்கீதத்தை அனுபவித்து இன்புறலாம்; தாங்களும் சங்கீதத்தைப் பொழியலாம். நாகரிகமடைந்த மனிதன் முதல் அநாகரிக வனவாசி வரையில் சகல மனிதர்களும், மனத்திலே உற்சாகம் ஏற்பட்டபோது பாடலாம்: கடிக்கலாம்; களித்துவிளையாடலாம். மனிதசமூகத்துக்குசத்விஷயங்களில் தூண்டுதல் அளிப்பதற்குரிய, மாட்சிமிக்க உன்னத கருத்துக்களை இயற்கை சங்கீதத்தின் மூலமே வெளியிட முடியும்.

சமது காயன்மார்களும், ஆச்சாரியர்களும், ஆழ்வார்களும் பக்தி மேலிட்டால், அழகான தோத்திரங்களையும், அருட்பாக்களையும் பாடியிருக்கிறார்கள். திருக்குறள், திருவாசகம், தேவாரம் முதலிய சமது பாடல்கள், வாழ்க்கையின் அரிய தத்துவங்களை சதா ஒலித்துக் கொண்டிருக்கின்றன. சரியான ராகபாவங்களோடு இவற்றைப் பாடினால், இவை சமது உள்ளத்திலே, பக்தி, தூய்மை, அன்பு ஆகிய குணங்களைத் தூண்டத்தவறமாட்டா.

இரண்டாவித சங்கீதம்.

சங்கீதம், மனத்தை, உன்னத ஒழுக்க நிலைக்கு உயர்த்தும்; மிகத் தாழ்ந்த கேவலப்படுகுழியில் தள்ளவும்தான் ரும். ஆகையால், சாம், அதிலும், முக்கியமாகசமது வாலிப ஸ்திரீபுருஷர்கள்தங்கள் சகவாச விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ள வேண்டும். சங்கீதத்தில் கல்லதுமுண்டு; கெட்டதுமுண்டு. சற்குணமும் தூய்மையும் படைத்த மனிதர்கள், ஆன்ம பாவசத்தோடு பாடும் சங்கீதமுண்டு. மோகமும், அழுக்கும் நிறைந்த பக்தியில்லாத மனிதர்கள் வெறிகொண்டு பாடும் சங்கீதமுமுண்டு.

ஆகையால், பகுத்தறிவுடன் பாடகரைப் பிடிக்கவேண்டும். பகிரங்க இடங்களில் பாடவும், ஆடவும் சங்கீதவித்வான்களையும், நாட்டியக்காரர்களையும் அழைக்கும்பொழுது நமது தலைவர்கள் ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். நமது சமூகம் கருத்திலும், செயலிலும் உன்னத நிலைமையை அடைய வேண்டுமென்பதே தலைவர்களின் விருப்பம். ஆகையால், கல்ல சங்கீதத்திறமை மாத்திரமன்றி, சிறந்த ஒழுக்கமுமுடையவர்களையே, பொதுக்கச்சேரிக்கு அழைக்க வேண்டும். ஏனெனில் அவை உலகுக்கு ஓர் உதாரணமாய்ப் பயன்படவேண்டும்.

சென்னை காங்கிரஸ் சங்கீதம்,

இந்திய கடனத்தையும், சங்கீதத்தையும் புத்துயிர்பெறச் செய்வதில் தங்களுக்குள்ள கவலை மேலீட்டால், நமது தலைவர்களில் சிலர், அடிப்படையான மேற்படி விஷயத்தை மறந்து விட்டது நமது துரதிர்ஷ்டமாகும். வித்வான்கள், நாட்டியக்காரர்களின் தினசரி வழக்கங்களையோ, வாழ்க்கை முறைகளையோ கவனிக்காமல், நல்லவர், தீயவர் ஆகிய எல்லாரையுமே, சென்னை காங்கிரஸ் சங்கீத விழா, சங்கீத சபைகள், கலாசாலைகள் முதலியவற்றில் கச்சேரி செய்ய அழைத்துவிட்டார்கள் இதனால், சங்கீத உலகத்துக்கும், விஷயமறியாத பொது ஜனங்களிடையிலும் தீங்குதான் சேரிடும்.

ஒழுக்கங் கெட்டவருக்கு ஆதரவு,

சங்கீதம் முதலிய உயரிய கலைகளின் வளர்ச்சிக்கும் சரி, நமது உடலும் மனமும் வளர்ச்சியடைவதற்கும் சரி, கற்புமிக அவசியமாகும். இதனை சகல மதங்களும் அங்கீகரிக்கின்றன. பகிரங்கமாய் விபசாரம் செய்து, வேசைகளாய் வாழ்க்கை நடத்தும் சில பெண்களை காங்கிரஸ்கூட சமீபத்தில் மிதமிஞ்சிய விளம்பரம் செய்து, பிரபலப் படுத்திவிட்டது, மிகவும் பரிதபிக்கத்தக்க விஷயமாகும். இவ்விஷயத்தில் எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் தவறாயின் அதைத் தெரிவிப்பின் சந்தோஷமாய் எனது அபிப்பிராயத்தைத் திருத்திக் கொள்வேன்.

"ஹிந்துவின்" கட்டுரை

1936-ஜனவரி மாதம் 17-ந்தேதி "ஹிந்து"ப்பத்திரிகையில் பரத நாட்டியத்தைப்பற்றிய ஓர் கட்டுரை பிரசுரமாயிருக்-

தது. பொது ஜனங்களின் கவனத்தை அதிகமாய் இழுப்பதற்காக, அக்கட்டுரையில், மேற்படி பெண்களின் மேனியழகைப் பற்றி வர்ணிக்கப்பட்டிருந்தது; அவர்களின் காட்டிய அபிநயங்களைக் குறித்து புகழப்பட்டிருந்தது. கல்யாணமான பெண்கள், காட்டியத்தையும் சங்கீதத்தையும் பரிபூரணமாய்க் கற்கமுடியாதென்று, நமது ஜனங்களில் சிலருக்கு அபிப்பிராயமிருந்து வருவதாக நான் கருதுகிறேன். ஆகையால், அக்கலைகளில் ஈடுபடும் பெண்கள், மணமாகாமல் மனம் போனபடி வாழ்வது அவசியமென அவர்கள் எண்ணுகிறார்கள். இந்த அபிப்பிராயம் பரவுவதற்கு இடங்கொடுப்போமானால், நமது சமூக க்ஷேத்துக்கு மாத்திரமின்றி, அந்தக் கலைகளுக்கே போராபத்து நிகழ்ந்துவிடும்.

தேவதாசி.

சங்கீதம், காட்டியம் ஆகிய இரு கலைகளின் பக்தர்களையும், நான் ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். அவர்கள் மேற்படி கலைகளின் மூலம் கன்னிகையரின் கற்பழியாப் புனிதத்தைக் காப்பாற்ற விரும்புகிறார்களா? அன்றி, ஒழுக்கங்கெட்டு மனம்போனபடி வாழும் வழக்கத்தை, விபசாரத்தை வளர்க்க விரும்புகிறார்களா? ஒழுக்கங்கெட்ட வாழ்வு, இறந்த காலக் காட்டுமிராண்டி வழக்கத்தின் எச்சமாகும்; பெண்களின் பெருமைகும், அந்தஸ்துக்குமே அவமானம் விளைவிப்பதாகும்.

மேனாடுகளில் காட்டிய மாதரும், கடிகைகளுமிருப்பது வாஸ்தவம். ஆனால், அவர்களது ஐதிகங்களுக்கும், தென்னிந்திய தேவதாசி வழக்கத்துக்கும் வித்தியாசமுண்டென்பதை நாம் யாவரும் அறிவோம். தென்னிந்திய தேவதாசிகள், போலி மத சம்பிரதாயம் ஒன்றுக்குப் பலியாகியிருப்பவர்கள். இந்த வழக்கத்தை ஒழிப்பதற்கு முயற்சிகளும் நடந்துவருகின்றன.

தேவதாசி ஒழிப்புச் சட்டங்கள்.

சென்னை மகாணத்திலும், மைசூர், திருவாங்கூர், கொச்சி ஆகிய சமஸ்தானங்களிலும், தேவதாசி வழக்கத்தை ஒழிக்கும் சட்டம் ஒன்று நிறைவேறியிருப்பது, பொது ஜனங்களுக்குத் தெரிந்திருக்கும். 18 வயதுக்குட்பட்ட பெண்களைக் கோயில்களுக்குப் பொட்டுக்கட்டினால் தண்டனை விதிக்கப்படும் என்று அச்சட்டம் கூறுகிறது. மேலும், பொட்டுக் கட்டுவதைத் தடுக்கும் மசோதா ஒன்றையும் சென்னை சட்ட

சபையில் தான் கொண்டுவந்தேன். சகல பிரபலஸ்தர்களும். அறிஞரும் அதனை ஆதரித்தார்கள். அன்றியும் பொட்டுக் கட்டுவதைத் தடுக்கும் சட்டம் ஒன்றை, மிகச் சமீபத்தில் பம்பாய்ச் சட்ட சபை நிறைவேற்றியிருக்கிறது. இந்த கடவடிக்கைகளுக்கெல்லாம் காரணம் ஒரே ஒன்றுதான். அதாவது, காட்டியமாடினும், இல்லாவிட்டாலும், தேவதாசிகளில் மிகப் பெரும்பாலோர், மனம்போனவாறு வேசைத் தொழில் புரிந்து வருகிறார்கள். மற்றும் சில தேவதாசிகள், தங்களை மணந்து கொள்ள முன் வருவோர் இல்லாததால், ஏற்கனவே விவாகமான சில மனிதரின் வைப்பாக வாழ்ந்துவருகிறார்கள்.

தேக அழகும், கேர்த்தியான சாரீரமும், சிறந்த காட்டியத் திறமையும் படைத்த தேவதாசிகளில் மிகப்பெரும்பாலோர், சிறு வயதிலேயே உடலும், மனமும் கேடுற்று, கேவலமாய் வாழ்வது சகலருமறிந்த விஷயம். இப்படி அவர்கள் கெட்டுப்போவதன் காரணம், தேகாரோக்கியத்துக்கு கேடான வாழ்க்கையில் அவர்கள் வாழ்வதுதான். இறுதியில் சங்கீத உலகமே அவர்களை இழந்துபோகிறது.

'காங்கிரசே ஆதரித்தால்—?'

தேசத்தின் அரசியலிலும், சமூக வாழ்விலும் புனருத்தாரணம் ஏற்படுவதற்காகப் போராடி வருகிறது காங்கிரஸ். அத்தக் காங்கிரஸ், பாதகாட்டிய அபிநயங்களை ஆதரிக்கும்இந்த ஆட்சேபகரமான நெறியைக் கைக்கொள்ளுமானால், பொதுஜன சுகாதாரத்தையும் ஒழுக்கத்தையும் சமீபத்தில் அபிவிருத்தி செய்ய முடியுமென நாம் எவ்வாறு நம்பமுடியும்? நம் சமூகத்தில் தலைதூக்கி நிற்கும் தீயவழக்கங்களில் சிலவற்றை, புத்தொளித்தனமான பிரசாரம், சட்டங்களின் மூலம் சமீபத்தில் ஒழிக்கலாம் என்றுதான் நாம் எவ்வாறு நம்பமுடியும்?

எது மாமிசம்? எது ஜீவகாருண்யம்?

(கா. வேலாயுதம்.)

காலை போய் மத்தியானம் எப்பொழுது ஆரம்பித்தது என்பதை நாம் எப்படி அறிய முடியும்? குழந்தைப்பருவம் போய் வாலிபப்பருவம் என்றைக்கு ஆரம்பித்தது என்பதை யார் சொல்ல முடியும்? அதேபோல் மரக்கறி போய் மாமிசமாய் எவ்வாறு பெருகிற்றென்பதை அறிவதெப்படி? மரக்கறி உணவிற்கும், மாமிச உணவிற்கும் எல்லை எங்கேயிருக்கிறது என்பதை யார் கூறமுடியும்? கோழிமுட்டைக்கு உயிர் உண்டென்றும், இல்லையென்றும் கூறுவது பெரும் வாதமாயிருக்கின்றது. கோழி முட்டையை மாமிசமென்று கூற விரும்புவோர் உயிர் உண்டென்றும, மாமிசமல்லவென்று கூற விரும்புவோர் உயிர் இல்லையென்றும் வாதமிடுவர் போலும்! ஆதலின் அதை மாமிச உணவா அல்லவா என்று எவ்வாறு தீர்மானிப்பது.

பால், நெய் மாமிச உணவா அல்லவா? பசு ஈனுவதும் பால் சுரப்பதும் மனிதனுக்காகவா? சென்னை முதலான சில இடங்களில் போய்ப்பார்த்தால் இளம்பசுங்கன்றுகளின் தோலிலும், எருமைக் கன்றுகளின் தோலிலும் வைக்கோல் அடைத்துக்கொண்டு தாய்க்குக் காட்டிப் பால் கறக்கின்றனர் அதை கண்கு விசாரிக்கும்போது, சில ஜீவகாருண்யக் காரர் பாலையெல்லாம் மனித வர்க்கத்தைச் சேர்ந்த தங்கள் நண்பர்களும், சொந்தக்காரர்களும் ஆகியவருக்குச் செய்த விருந்துகளுக்கென்றும், தங்கள் சாத்மீகம் நிறைந்து ஜீவகாருண்யம் வாய்ந்த தெய்வங்களுக்குக் கொண்டாடிய விரதங்களுக்கென்றும், அப்பசுக்களின் பாலையெல்லாம் பருகிவிட்டனர் என்றும்; அதனால் கன்றுகளும் உண்ணாவிரதம் கொண்டாடி உயிர் துறந்தன என்றும், ஜீவகாருண்யம் வாய்ந்த மக்கள் எத்தனை பேரைக்கண்டாலும் பசுக்களும், எருமைகளும் பால் சுரப்பதில்லை என்றும், கன்றுகளையேனும் கன்றுகளின் சாயலேனும் கண்டால் மாத்திரம் பால் சுரக்கின்றன என்றும் அங்குள்ளோர் கூறுகின்றனர். ஜீவகாருண்யக்காரருடைய ஜனங்கள் வைசூரியில் இறவாத வண்ணம் அம்மை குத்திக்கொள்வதற்கு வேண்டிய பால் உதவு

வதில் தங்கள் இளங்கன்றுகள் பலியாகும் கதைகளை உரைத்தால் ஆசாங்கத்துக்கு விரோதமாகுமென்று இப்பசுக்கள் ஒருக்காலும்உரைப்பதில்லை.

ஜீவராசிகளை ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ளவை ளென்கின்றோம். ஓரறிவுள்ள ஜீவராசிகள் என்று கருதப் படும் செடி, கொடி, புல், பூண்டு எத்தனைவகையும் எத்தனை தன்மைகளும் உள்ளனவாகக்காணப்படுகின்றன! இவற்றிற்கும் மற்றைந்த ஜீவர்களுக்கும் பொதுவாக ஜீவ ஆதாரத்திற்கு உணவு, தண்ணீர், காற்று, தகுந்த சீதோஷ்ணம தகுந்த வெளிச்சம் ஆகியவை வேண்டும். எல்லா ஜீவர்களுக்கும் எலும்பு, சரம்பு, சதை, தோல் ஆகிய அவயவப்பகுப்பு உண்டு. இவற்றுள் ஏதேனும் ஒன்றிரண்டு அம்சங்கள் குறைந்துமிருக்கலாம். எந்த ஜீவர்களுக்கும் பொதுவாக ரத்தம் என்றோ, சாரம் என்றோ, நீர் என்றோ பெயர்களைத் தாங்கும் திரவம் உண்டு. அதிலும் செடிகளில் பல நிறமுள்ள சாரங்கள் உண்டு. சிருகங்களுக்கும் பறவைகளுக்கும் அந்நீர் செந்நீராகஇருக்கின்றது. மற்றவற்றிற்கு வேறுபல நிறங்களில் உண்டு.

ஒரே மாதிரியான ரத்தாசயமுள்ள மனிதன், விலங்கு, பறவை ஆகியவற்றின் சதையை மாமிசமென்பர்; புலால் என்பர். பிறகு வேறு மாதிரியான ரத்தமும் ஐயறிவு முள்ள உடும்பு, முதலை, பல்லி, முதலியவற்றின் சதையை மாமிசம், என்பர். காது நீங்கலாக மற்ற அறிவுகளையுள்ளதும, வேறு மாதிரி இரத்தாசயமுள்ளதுமான பாம்பு முதலிய பிராணிகளின் சதையை மாமிசம் என்பார். காது, மூக்கு நீங்கலாக உள்ளனவும், வேறுமாதிரியான எலும்பும், சதையுமுள்ளவும், தோல் இல்லாதனவுமான நண்டு, நத்தை பூச்சிகளின் சதையை மாமிசம் என்பர். பரிசமும் சுவையும் மட்டிலுமுள்ளனவும் எலும்பில்லாது வேறு மாதிரி ரத்தமுள்ளனவுமான அட்டை முதலான பிராணிகளின் சதையை மாமிசமென்பர் பரிசம் மட்டிலுமுள்ளதும், எலும்புஇல்லாததுமானமண்புழுபோன்றவற்றின் சதையை மாமிசமென்பர். பரிசம் மட்டிலுமுள்ளதும் வேறு மாதிரியான எலும்பு தோல் சரம்பு சதையுள்ளதும், வேறு மாதிரியான ரத்தமுள்ளதுமான கத்திரிச் செடி போன்றவற்றின் சதையை மாமிசமல்லவென்பர். பிறத்தல், வளர்தல், சாதல், இறத்தல் சுக துக்கம் எல்லாவற்றையுமுடைய கத்திரிச்செடியின் சதையை மாமிசமல்லவென்பர். என்ன அதிசயம்!

முன் சொன்ன ஜீவர்கள் எல்லாம் இடம் விட்டு இடம் செல்லக்கூடியவை. ஆகையால் அவற்றின் சதையை மாமிசமென்றும், மற்றவற்றின் சதையை அல்லவென்றும் சொல்லுவோமானால், செடிகளிலும் இடம் விட்டு இடம் செல்லக்கூடியவை இருக்கின்றனவே, அவற்றின் சதையை என்னவென்று அழைக்கிறோம்? இடம் விட்டு இடம் செல்ல முடியாத பிராணிகள் உண்டு. அவற்றின் சதையை என்னவென்று அழைக்கிறோம்? கோழி, பசுமுதலியவற்றின் சதையை மாமிசம் என்போம். கோழி முட்டை பால் முதலியவற்றை மாமிசமென்று கூற யோசிக்கிறோம். பசுவின் சாணத்தை மாமிசமல்ல என்கிறோம். அதில் தோன்றும் புழு, தேள் முதலியவற்றை மாமிசமென்கிறோம். மரக்கறி போய் மாமிசம் எந்த இடத்தில் ஆரம்பிக்கிறது.

நீர்வாழைக்காய் என்ற பெயரை வைத்து மீன்களை உண்ணும் வைதீக மச்சப் பிராமணர் எத்தனை பேர்? காளான் வெங்காயமெல்லாம் மாமிசமென்றே சொல்லலாம் ஆகையால் தின்னக்கூடாதென்று அவற்றையொழித்து, தக்ஷிணை அங்கரிப்போமேயொழியப் பிச்சை வாங்கமாட்டோம் என்று பணம் பறிக்கும் பகற் கொள்ளை மாந்தர் எத்தனைபேர் இவ்வுலகில்!

கத்திரிக்காயிலிருந்து மனிதன் வரைக்குமுள்ள வரிசையில் பால், தேள், புனுகு, முட்டை சவ்வாது முதலானவற்றை எந்தெந்த இடங்களில் வைக்கவேண்டுமோ விளங்கவில்லை. ஜீவகாருண்யம் நிறைந்தவரும், வைதீகம் பெருத்தவரும் தினந்தினம் கொண்டாடும் கோரோசனை, கஸ்தூரி, முத்து பவழம், யானைத்தந்தம் முதலானவற்றை என்னென்று சொல்வது!

ஓரறிவுயிர்க்கு உறுதுயர் ஓம்பி, ஆறறிவுயிர்க்கு அதுதுயர் விளைக்கும் சில உத்தமர்கள் சில செயல்களைப் பெரிய பாவம் என்கின்றனர்! சில செயல்களைச் சிறிய பாவம் என்கின்றனர்! பாவம் போய் புண்ணியம் ஆம் என்பர். புண்ணியம் போய் பாவம் ஆம் என்பர். ஒரு பூனை மயிரைக் கழித்திடில் ஒரு கோபுரத்தை இடித்த பாவம் என்றும், ஒரு குளவிக்கூட்டைக்கலைத்திடில் ஒரு ஊரை அழித்த பாவமென்றும், ஒரு நாகப்பாம்பைக் கொன்றிடில் பிள்ளையைக் கொன்ற பாவமென்றும, ஒரு நளசிச் செடியைக் கொன்றிடில் பெருந்தோஷம் என்றும்; ஒரு தென்னை அல்லது வாழையை வெட்டினால் நாகஞ் சோவேண்டுமென்றும்: ஒரு வில்வ மரத்தை

வெட்டினால் எழேழு ஜன்மம் நாகமென்றும்; ஒரு பூச்செடி வளர்த்தால் புண்ணியம் மிகுமென்றும்; ஒரு அரசையும் வேம்பையும் ஒன்றாய் வளர்த்துக் கல்யாணம் செய்து வைத்தால் புண்ணியம் பெருகிப் புத்திரதோஷம் நீங்கும் என்றும்; அவற்றில் ஒன்றை வெட்டினால் மனையாளை வெட்டின பாவமென்றும்; மணவாளனை இழந்து கவலையில் மூழ்கும் ஒரு எழைப் பெண் முகத்தில் விழித்தால் மூதேவி தொடர்வள் என்றும்; முருங்கை மாத்தின் முகத்தில் விழித்தால் முக்காலும் தோஷமென்றும்; கண்டு கவலை முதலிய ஜீவர்களை வைகுண்டம் சேர்க்கும் கருடனுடைய முகத்தில் விழிப்பது புண்ணியம் என்றும்; கருடனையேனும், மயிலையேனும் கொன்றுவிடின் தேவர்களுக்கு அபராதியாகி மீளா நரகம் விளையும் என்றும்; தாமே செத்தபிராணிகளின் உடலைப் புசிக்கும் கழுகின் முகத்தில் விழிப்பதில் புண்ணியமில்லை என்றும்; சில எழை மனிதருக்கு குடிக்கத் தண்ணீர் கொடுத்தாலும், தொட்டுவிட நேர்ந்தாலும் சண்டாளத்துவம் வாய்க்குமென்றும் பலவாறு பாகுபடுத்தி உரைக்கின்றனர்.

ஆகப்பாவம் வந்து சேர்வது ஓரறிவு, ஈரறிவு என்ற விஷயங்களைப் பொறுத்ததாயும் இல்லை. ஓணானை அடித்திடில் உழக்குப் புண்ணியம் என்பாரும் உண்டு. படமெடுக்காத பாம்புகளைக் கொன்றிடில் பாவமோ புண்ணியமோ என்பதே சந்தேகம். வீடுகள் தோறும் விளக்குகளை ஏராளமாய் ஏற்றிவைத்து பூச்சிகள் விழுந்து சாகும்படி செய்வது பாவமா புண்ணியமா? நாட்டில் ஏராளமான கள்ளுக் கடைகளை ஏற்படுத்தி விற்கச் செய்வது பாவமா புண்ணியமா? திருக்கோயில்களில் விளக்குப் போடுவது பாவமா புண்ணியமா? கடவுளை வழிபடுவதாகக் கூறி ஈசனார் சன்னதியாயுள்ள பிராணிகளைக கொலை புரிவது பாவமா புண்ணியமா? சமணர்களில் பலபேர் விளக்கெரிக்காமல் இருந்தது நியாயமா அநியாயமா? பிறரைக் கொன்றுவிடுவது கொலையோ அல்லவோ? உயிர்கள் தாங்களே விழுந்து சாக ஏற்பாடு செய்து விடுவது கொலையோ அல்லவோ?

மனிதன் குடியிருப்பதற்கென்று கட்டும் வீடுகளில் மனிதனுக்கு இம்சையைத் தரும் எறும்பு, முகட்டுப்பூச்சி, கொசு, பூரான், பூச்சி முதலானவற்றைக்கொல்வது பாவமோ, புண்ணியமோ, ஞாண்டுமில்லையோ தெரியவில்லை. மனிதனைக் கொல்லும் காடியையோ பாம்பையோ கொல்வது பாவமோ.

புண்ணியமோ; என்னென்றுரைப்பரோ? பிறரைக் கொல்லும் காடியைக் கொல்லுதல் பாவமென்றும், தங்களைக்கொல்லும் காடியைக் கொல்லுதல் புண்ணியம் என்றுந்தான் உரைப்பர்!

மலேரியாக் கிருமிக்கு வாகனமாய் உதவி, மனிதனைக் கொல்லக் காரணமாயுள்ள கொசுவைக் கொல்வது பாவமோ புண்ணியமோ? மனிதனைக் கொல்லவேண்டுமென்று கனாவிலும் கெட்ட எண்ணம் எண்ணாத காலறாக் கிருமிகளைக் கொல்வது பாவமா புண்ணியமா? காலறாக் கிருமிகளுக்கு வாகனமாயுள்ள ஈக்களைக் கொல்லுவது பாவமா புண்ணியமா? ஈக்கள் அதிகமாய் வந்தால் இலகுமிவருவாளாம். அப்படிப்பட்ட ஈக்களைக் கொல்லுவது பாவமா புண்ணியமா? மனிதரைக் கொல்லுகிறோ மென்றாவது கொல்லவேண்டுமென்றாவது என்றைக்கும் நினைக்காத குற்றமற்ற ப்ளேக் கிருமிகளை ஒழிப்பது பாவமா புண்ணியமா? அவற்றின் வாகனமாயுள்ள எலிகளைக் கொல்லுதல் பாவமா புண்ணியமா? விஷாயகருடைய வாகனமாயும் உள்ள எலிகளைக் கொல்லுதல் பாவமா புண்ணியமா? மனிதனுடைய உபயோகத்துக்கு வேண்டிய கோழிகளைக் கொல்லும் பிராணிகளை வேட்டையாடுவது பாவமா புண்ணியமா? மகாவிஷ்ணுவின் வாகனமாயுள்ள கருடனைக் கொல்லுவது பாவமா புண்ணியமா?

ஒரு பர்லாங் தூரத்தில வரும்போதே கண்ணால் பார்க்கக்கூடிய பிராணியைக் கொன்றால் மட்டிலும் பாவமா? பக்கத்தில் சென்று பார்க்கக்கூடிய பிராணியைக் கொன்றாலும் பாவந்தானா? சுலபமாய்ப் பார்க்கமுடியாத பிராணியை கொன்றாலும் பாவந்தானா? மேலே சொன்ன அவயவப் பகுப்புடன் கூடி ஊர்ந்து செல்லும் பிராணிகளின் உடல்கள் மாமிசமுடையனவா மரக்கறியுடையனவா? கொல்லுவதனால் பாவமா புண்ணியமா? தானே மரித்தபின் பிராணியின் உடலை அருந்துவது பாவமா புண்ணியமா?

மனிதனுடைய உணவுக்கு வேண்டிய கதிர்களை பாழாக்கும் பூச்சிகளைக் கொல்லுதல் பாவமா புண்ணியமா? மனிதனுடைய உணவுக்கு வேண்டிய கதிர்களைக் கொள்ளையடிக்கும் பறவைகளைக் கொல்லுதல் பாவமா புண்ணியமா? மனிதனுக்கு வேண்டிய தானியத்தையும், பழங்களையும் கொள்ளையடிக்கும் குரங்கைக் கொல்வது பாவமா புண்ணியமா? அக்குரங்குகளை கம் கழனிகளிலிருந்து இன்னொருவன் கழ-

னிக்குத்துரத்திவிடுவது பாவமா புண்ணியமா? "ஸ்ரீராமர் தூத னாயிருந்து சிரஞ்சீவிப் பட்டம் பெற்ற அனுமானின்" சக்தி கனைக் கொல்லுவது பாவமா புண்ணியமா? மனிதன் தான் வாழ்வதற்காகப் பிற உயிர்களைக் கொல்லுவது பாவமா புண் ணியமா?

தங்களைக்கொல்ல வரும் மனிதரைக் கொல்லுவது பாவ மா புண்ணியமா? ஒரு தேசத்தின் சுதந்திரத்தை அழிக்கும் மற்றொரு தேசத்து மக்களைக் கொல்வது பாவமா புண்ணிய மா? யுத்தங்களை நடத்துவது தர்மமா அதர்மமா? மனி தனை மனிதன் கொல்வது பாவமா புண்ணியமா? மனிதன் பிராணிகளைக் கொல்வது பாவமா புண்ணியமா? ஒருவன் உயிர் வாழ்வது பாவமா புண்ணியமா? பிற உயிர்களைக் கொன்று தான் உயிர் வாழ்வதைக் காட்டிலும் தான் இறப்பது கல்லதென்று 63 நாள் பட்டினி கிடந்து இறந்த சமண சங்கி யாசி அறிவாளியா மூடரா?

ஒருவர் குடியிருப்பதை ஓட்டிவிட்டு நாம் குடியிருப்பது பாவமா புண்ணியமா? காடுவெட்டி நாடாக்குவது பாவமாபுண் ணியமா? உயிர்க்கெல்லாம் பொதுவான உலகில் தனக்கென்று சொத்துக்கள் வைத்துக்கொள்ளுவது பாவமா புண்ணியமா? முகட்டுப் பூச்சியையும், தங்கள் பிள்ளைகளையும் ஒரு மாதிரி னைக்கப்புகும் ஜீவகாருண்ய மாந்தர் தங்கள் பிள்ளைகளும், முகட்டுப் பூச்சியும உயிர் வாழ்வதாகச் செய்யும் போராட்டத் தில் எந்தக கட்சிக்கு உதவி புரிவர்? கக்ஷி சேர்ப்பது பாவமா புண்ணியமா?

ஒருவரைச் சித்திரவதை செய்வது கொலையா அதை விடப் பெரிதா? புருஷனையிழந்த பெண்கள் மறு மணம் செய் வதைத் தடுப்பது கொலையா அதைவிடப் பெரிதா? ஒருவர் சுதந்திரங்களையெல்லாம் பிடுங்கிகொள்வது கொலையா அதற்குக் குறைந்ததா? ஒரு சில ஜனங்களைத் தாழ்த்துவது (சுதந்திரங்களைப் பிடுங்குவது) கொலையா சித்திரவதையா? சித்திரவதை அடைந்துகொண்டிருக்கும் உயிரைக கொல்வது பாவமா புண்ணியமா? சுயகலத்துக்காக கொல்லுதல் பாவமா புண்ணியமா சனாதன தர்மமா? ஒரு சௌகரியத்துக்காகக் கொல்லுதல் பாவமோ? மற்றொருசௌகரியத்துக் காகக்கொல் லுதல் புண்ணியமோ? உடைகளுக்காகக் கொல்லுதல் புண்ணியமோ? உணவுக்காக கொல்லுதல் பாவமோ? பட்டுப் புழுவைக்கொல்வதுபுண்ணியமோ? கோழியைக் கொல்லுவது பாவமோ? ஏழை மனிதரைக் கொல்வதும் சனாதனதர்மமோ?

மறந்துவிடாதீர்கள்.

ஞாபகத்தில் வைக்கவேண்டிய முக்கிய ஆசாமிகளையும், சம்பவங்களையும் எழுதி வைத்துக்கொள்வது தற்காலப் பழக்கம். எழுதப் படிக்கத் தெரியாத காலத்தில் வாழ்ந்த ஜனங்கள் தங்கள் ஞாபகத்தில் மறக்காமல் வைக்கவேண்டிய விஷயங்களை "முடிந்து வைத்து" வந்தார்கள். இன்றைக்கும் எழுதப் படிகதத் தெரியாத ஜனங்கள் குறிப்பான சங்கதிகளை மறக்காமல் இருப்பதற்காகத் தங்கள் வேஷ்டிகளில் முடி போட்டு வைதை நாம் பார்க்கிறோம். வேறு சுவனங்களில் விஷயத்தை மறந்தபோது வேஷ்டியில் முடிந்த முடிச்சு விஷயத்தை நினைப்பூட்டுகிறது.

மாலையிட்டவனை மறக்காமல் இருப்பதற்காகத்தான் போலும் மனைவி கழுத்தில் புருஷன் முடிபோடுவதும்! அப்போது போடும் "முடி" காதலின் ஞாபகச் சின்னம். அரச சின்னத்தையும் ஒரு 'முடி' யேகுறிக்கிறது. ஒருவனைப்பார்த்து இன்னொருவன் "எல்லாம் முடிந்து வை" என்று சொல்லும்போது அவன் போடச்சொல்லும் முடிச்சு எதற்காக? "பிரஸ்தாப விஷயத்தை நான் என்றும் மறக்கட்போவதில்லை. நீயும் மறக்கக்கூடாது. எப்போதும் ஞாபகம் இருக்கட்டும்" என்பதற்காக வல்லவா? போட்ட முடியை அறுத்து விட்டால்தான் பிடித்த பேய் பிசாசுகூட விட்டு விட்டுப்போகிறதாம்.

∴ ∴ ∴

பாரிசில் முடிச்சு வேலை.

பிரான்ஸில் 1789-ம் வருஷம் ஏற்பட்ட பெரிய புரட்சிக்கு முன் கொஞ்ச காலமாகவே பாரீஸ் நகரில் சில பெண்கள் புதிதான ஒருவித முடிச்சு வேலையைக் கற்றுக்கொண்டு வெகு மும்முரமாக நடத்தி வந்தார்

கோழி மாமிசம் புலாலாம். கோரோசனை மாததிரை ஔஷதமாம். கண்டின் சதையைத் தின்பது காறும் புலாலாம். கண்டோட்டுச் சுண்ணம் கோய்திருமருந்தாம். மானின் மாமிசம் தின்றால் புலாலாம். அதன் கொம்பைத் தின்றால் சிங்கிபஸ்பமாம். புழுவைத்தின்றால் புலாலாம். புழுவின் சத்தைத் தின்றால் தாமிர பஸ்பமாம். புலால் குறைத்து ஜீவகாருண்ய மருந்தாக எப்பொழுது எவ்விடத்து எவ்வாறு மாறிவிடுகின்றதோ? ஒரே பொருள் ஒருவர் வீட்டில் பொல்லாப் புலாலாய் காய்வதும், மற்றொருவர் கையில் மதிக்கொணா மருந்தாய் கனமணங் கமழுவதுமான ஆச்சரியத்தை யாரே அறிய வல்லார்!

கள். இந்தப் பின்னல் வேலையை எற்றுக்கொண்டவர்கள், இரவு பகல் ஓயாமல் அதைச் செய்து வந்தார்கள். அவர்கள் பின்னியது என்ன? போட்ட முடிச்சுகள் என்ன?———

பாரிஸ் நகரிலும், பிரான்ஸ் தேசத்தின் சில மாகாணங்களிலும்புரட்சி இயக்கத்துடன் சேர்ந்த சங்கங்கள் பல தோன்றி இரகசியமாக வேலை செய்து வந்தன. குருக்கள்மாரும் பிரபுக்களும் அதிகாரிகளும் நான்தோறும் பாமர மக்களுக்குச் செய்த கொடுமைகள் ஒவ்வொன்றும், புரட்சிப் பெண்களால் 'முடிந்து" வைக்கப்பட்டன. ஏழை மக்களிடத்து இரக்கமின்றிக் கொடுமை செய்த பாதிரியும், பணக்காரனும், அவர்கள் பெயர் விலாசத்துடனும், அவர்கள் செய்த கொடுமையின் விபரத்துடனும், நிகழ்ந்த இடம், கால விவரங்களுடனும், சமத்துவ விசாரிக்காரர் பட்டியில் நம்பர் கொடுக்கப்பட்டுப் புரட்சிச் சங்கங்களின் பின்னல் ரிஜிஸ்தர்களில் 'முடிந்து' வைக்கப்பட்டனர். எழுத்தை எவரும் வாசித்தறியலாம். பாரிஸ் நகரப் பெண்கள் போட்ட முடிச்சுகளைப் புரட்சிக்காரர்தான் படித்தறியலாம். மற்றவர்களுக்கு அவை வெறும் அலங்காரப் பின்னல்களே. பின்னால் 1789ல் பூகம்பம் வெடித்தவுடன் முடியரசு போய், குடி அரசு ஏற்பட்டதும், மேற்படி பின்னல் வேலைகள் எல்லாம் நியாய ஸ்தலங்களில் குற்றப் பத்திரிகைகளாய் விளங்கின. அக்காலத்தில் அப்பெண்கள் போட்ட 'முடிச்சு'களில் குறிக்கப்பட்ட முடிகள் (தலைகள்) ஒன்று தவறாமல் தூக்கு மேடையில் உருண்டன.

அம்மாதிரி பெண்களும் அவர்கள் செய்த முடிச்சு வேலைகளும் நம்நாட்டில்ஏற்படக்கூடாதென்பது நமது ஆசை.

ஃஃ ஃஃ ஃஃ

ஆனால், நம்முடைய சமூக வாழ்க்கையில் உள்ள ஊழல்களும், கொடுமைகளும், இனியும் பாமர மக்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா என்று சந்தேகங் கொள்ளும்படி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகின்றன என்பதை யாரால் மறுக்க முடியும்? ஜாதித் திமிர் பிடித்த மேல் ஜாதிக்காரர் என்பவர்கள் தங்களுடைய அகம்பாவம்நிறைந்தபேச்சுக்களினாலும், அக்கிரமமான செய்கைகளினாலும், "கீழ்ஜாதி"கள் என்பவர்களுடைய மனங்களை எவ்வளவு தூரம் புண்படுத்தியும், அவர்களை அவமானப்படுத்தி இழிவு செய்தும வருகிறார்கள் என்பதை மேல் ஜாதிக்காரர் இன்னும் உணர்ந்துகொள்ள வில்லை.

ஜாதித் திமிர்

"அந்தச் சூத்திரக் குட்டிகளைத் தொட்டுக்காமே விளையாடு. தொட்டாக் குவிக்கணும்" என்று பார்ப்பனர் தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லும்போது, சனாதன தர்மத்தையும், குல ஆசாரத்தையும் கற்பிக்க வேண்டிய கடமையைச் செய்வதாகத்தான் அவர்கள் கினைத்துக் கொண்டிருக்கலாம்!

"செக்கான் தன் ஜாதிப் புத்தியைக் காட்டுகிறான்" என்று படம் போட்டு எழுதிய பத்திரிகையாசிரியரும் நாட்டில் தேசபக்தியை விருத்தி செய்வதற்காகவும், தர்மராஜ்யம் ஏற்படுத்துவதற்காகவுமே எழுதினதாகச் சொல்லலாம்!

"அவள் பறச்சி! அவளை உட்காரவச்சா, நான் இருக்கமாட்டேன்" என்று மோட்டார் பஸ்ஸை விட்டு இறங்கிப்போன கவுண்டச்சி, வாடகைமோட்டாரில் பறச்சியோடு சமமாக உட்கார்ந்து வருவது தன் ஜாதிகௌரவம் என்று நினைத்துக்கொண்டிருக்கலாம்!

"பறையன் கொழுப்பைப் பார்! நாமெல்லாம் நிக்கறது கண்ணுக்குத் தெரியாமே, சைக்கிள் சவாரி செய்யறதுக்கு ஆய்ப்போச்சு! பிடியுங்கடா! போடடா செருப்பிலே" என்று ஒரு ஆதி இந்துவைத் தண்டனை செய்து தண்டிக்கப்பட்ட ஆந்திரா காயுடு சாஸ்தானமும் தான் செய்ததில் தவறு ஒன்றும் இல்லையென்றுதான் எண்ணிக்கொண்டிருக்கலாம்.

இவைபோன்ற சம்பவங்கள் தினப்படி தேசமெங்கும் நிகழ்ந்துகொண்டும், நாளுக்கு நாள் பெருகிக்கொண்டும் வருவதைக் கவனிக்கும்போது ஆத்திரமும், வருத்தமும் உண்டாகாமல் எப்படியிருக்கமுடியும்?

ஃஃ ஃஃ ஃஃ

ராஜாஜியும், சமதர்மமும்

சுமார் 15, 16 வருஷங்களுக்கு மேல் இருக்கலாம். ருஷியாவில் பொதுவுடமைப் புரட்சியேற்பட்ட சமயம் தமிழ் நாட்டில், (திருச்சியில் என்ற ஞாபகம்) ஒரு "சமூக சீர்திருத்த மகாநாடு" நடந்தது. அந்தக் காலத்தில் ராஜீய மகாநாடுகளுடன் சமூக சீர்திருத்த மகாநாடுகளும் நடப்பது வழக்கம். இப்போது சமூக சீர்திருத்த வேலையையும் ராஜீய ஸ்தாபனமே நடத்துவதாகச்சொல்லி சமூக சீர்திருத்தத்திற்குத் தனி ஸ்தாபனமும் இல்லை. மகாநாடும் இல்லை. அந்தச் சமூகச் சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்த தோழர் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் வர்கள் தமது தலைமைப் பேருரையில் ஜாதி வித்தியாசங்களால் விளையும் கொடுமைகளையும், தீண்டாமையின் அக்கிரமத்தையும் உணர்ச்சி ததும்பிய உரைகளால் எடுத்துக்காட்டி, ருஷியாவின் நிலைமையையும், பொதுவுடமைப் புரட்சியின் தத்துவத்தையும உதாரணங் காட்டி, "வெகு சீக்கிரத்தில் இந்த நாட்டிலும் அம்மாதிரி சமூகப் புரட்சி ஏற்படுவது உறுதி, அப்போது ருஷியாவில் நிகழ்ந்த பலாத்காரங்கள் இங்கும் ஏற்படாமலிருக்க வேண்டுமென்றால் மேல் ஜாதிக்காரர்கள் தங்கள் ஜாதித் திமிரையும், அகம்பாவத்தையும் விட்டொழித்துத் தீண்டாதாருள்ளிட்ட எல்லாரிடத்தும் சமத்துவத்துடன் நடந்துகொள்ளவேண்டும்"

என்றுமேல் ஜாதிக்காரருக்கு எச்சரிக்கை செய்து உண்மையான ஆவேசத்துடன் பேசியது வெகு காலம் என் மனத்தை விட்டு நீங்கவில்லை.

சமத்துவத்தில் தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு அன்று இருந்த ஆசை இன்றும் குறையாதிருக்கிறதென்று நம்புவதற்கில்லை. அன்று அவர்கள் முன் தோன்றிய சமதர்மப்புரட்சி இன்றுநாஸ்திகமாகவும், பிராமணத்துவேஷமாகவும் மாறிதெரிகிறது. அதனால் அவர் சனாதன தர்மத்தையும், இந்துமதத்தையும் காப்பாற்றும் வேலையில் ஈடுபடவேண்டியதாய் விட்டது.

வாயளவில் சமூகசீர்திருத்தம் பேசிய உயர்குலப்பிரமுகர்கள் எல்லோரும் இன்று சீர்திருத்தத்தை எதிர்த்து ஜாதி மிராசுகளுக்காகப்பகிரங்கமாகவே போராட வேண்டிய நிலைக்கு (சுயமரியாதை)ச் சீர்திருத்த இயக்கம் பாமர மக்களிடை பரவி விட்டது. "பயப்படாதீர்கள். பார்ப்பனீயத்தைவீழ்த்த யாராலும் முடியாது. சூராதி சூர்களும், இரண்யாதி வீரர்களும், இராவணேஸ்வரஸ் முதலான சக்ரவர்த்திகளும், மஹாவீர் சித்தார்த்தர் முதலிய அவதார புருஷர்களும், மகம்மதுகஜினி, கோரி முதலிய விக்கிரக வேட்டைக்காரர்களும், குருநானக் முதலானபத்துசீக்கிய சிங்கங்களும் முயன்று தோற்றுப்போனார்கள். நேற்று முளைத்த ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக்காரரும் என்ன செய்ய முடியும்?" என்று சரித்திரம் சொல்லித்தன் குலத்தவர்க்குத் தோழர் வி. ஆர். அவர்களே தேறுதல் சொல்லிப் பயந்தெளிவிக்க வேண்டிய நிலைமைக்கும் சீர்திருத்தம் பரவி விட்டது.

ஈ. வெ. ராவும் சமதர்மமும்.

இந்து சமூகத்தைச் சீர்திருத்தவேண்டுமென்ற ஊக்கம் மேல் ஜாதியாருக்குக் குறையக்குறைய, சமத்துவம் பெறுவதில் கீழ் ஜாதியார்களுக்குள்ள ஆசை வளர்ந்து வருகிறது. அன்னிய ஆட்சியால், கல்வியானது பாமர மக்களிடை, மெதுவாகவாயினும், பரவிக்கொண்டு வருவதால் அந்தச்சமூகங்கள் விழித்துக்கொண்டு வருகின்றன. "குடிஅரசும்" சுயமரியாதைக்காரர்களும், சென்ற 10 வருஷங்களாகச்செய்து வருகின்ற தீவிரபிரசாரத்தின் பலனாக, தாழ்த்தப் பட்டு, ஒடுக்கப்பட்டு, கேவலம் மிருகங்களிலும் கீழாக மதிக்கப்பட்டு வந்த சமூகங்கள் இன்று, மனிதப் பிறப்பின் உரிமைகளை உணர்ந்து தங்கள் உடைகளிலும் சுத்த ரத்தம் தான் ஓடுகின்றது என்பதை வெளிப்படுத்தி வருகிறார்கள். கோவில்களுக்கும், குருக்களுக்கும், புராணங்களுக்கும் இருந்த மரியாதை இந்தப்பத்து வருஷங்களில் எவ்வளவோ குறைந்து விட்டன. பொதுவாக, மூடநம்பிக்கைகள் எல்லாம் பகுத்தறிவின் வளர்ச்சியினால் தகர்க்கப்பட்டு வருகின்றன. பல நூற்றாண்டுகளில் பல பெரியோர்களால் செய்ய முடியாத மகத்தான, மாறுதல் என்றால் போதாது, புரட்சியை, ஒரு பத்து வருஷங்களில் தமிழ்நாடெங்கும் உண்டாக்கிய பெருமை தோழர் ஈ. வெ. ரா. அவர்களுக்கும் பொன்னம்பலம் குருசாமி முதலிய அவருடைய சகாக்களுக்கும் உரித்தாகும்.

❀ ❀ ❀

தேசம் இன்று உள்ள நிலையில் சமதர்மப்பிரசாரம் செய்வது சுலபமான காரியம் அல்ல. தேசியம் பேசுவது யார்க்கும் எளிது. தேசியம் என்றால் பாமர மக்களுக்குத் தெரியாது. பார்ப்பனருக்கோ ஆதாயம் சர்க்காருக்கோ குஷால். ஆனால், உண்மையைச் சொல்வது, பலர் கிளைடடி அவ்வளவு எளிதான காரியமல்ல. நம்முடைய ஊழல்களை உள்ளது உள்ளபடி சொல்லும் தைரியம், நமக்கு இன்று வேண்டியது இன்னின்னவையென்று கண்டறியும் தீர்க்க தரிசனம், எவ்வித எதிர்ப்புக்கும் அஞ்சாமல் எடுத்தக்கொண்ட முயற்சியில் தளராத ஊக்கம் ஆகிய சிறந்த குணங்கள் இருந்தாலன்றி பிராமணீயத்தையும், தேசியத்தையும் எதிர்த்துப்பிரசாரம செய்வது முடியாத காரியம். சுயமரியாதைக்காரர்களிடம், மேற்படி குணங்கள் இருப்பதாலேயே அவர்கள் இயக்கம் இவ்வளவு விரைவில் பரவிவருகின்றது. சுயமரியாதை இயக்கத்தையும், சுயமரியாதைப்பிரசாரகர்களையும் பார்ப்பனரும், மேல்ஜாதிக்காரர்களும் தங்களுடைய கொடியவிரோதிகள் என்று எண்ணி மிதமிஞ்சி ஆத்திரப்படுவதும் இந்த இயக்கத்தின் வெற்றிக்கு அத்தாட்சியாகும்.

சமதர்ம வளர்ச்சியைத் தடைப்படுத்த முடியுமா?

சுயமரியாதைக்காரரிடமும், அவர்கள் தலைவர் ஈ. வெ. ராவிடமும் ஒரு சிலருக்கிருக்கும் கோபம் நியாயமற்றது. முட்டாள் தனமானது என்று கூடசிலசொல்லலாம். ஏனெனில் சுயமரியாதைக்காரரும், குடிஅரசும் ஒழிந்து போனாலுங்கூட இன்றைய நிலையில், சமதர்ம வளர்ச்சியைத் தடைப்படுத்தவோ, வரப்போகும் சமூகப்புரட்சியை நிறுத்தவோமுடியாது. 'பழயபடி, சிலர் 'தேவர்'களாகவும், பலர் 'மக்களா'கவும், வேறு பலர் 'நரகர்'களாகவும் வாழ முடியும்என்று இன்னும் கனவு காண்பவர் பெரிதும் ஏமாற்றமடைவார்கள். ஆனால் வர்ணாச்ரம, ஜாதியாச்ரமதர்மத்திலிருந்து சமதர்மத்திற்கு மாறும்முறையைச் சமாதானமான முறையாகச் செய்து கொள்ளலாம- புரட்சியின் பயங்கரத்தைச்சிறிது குறைக்கலாம். அதன் வேகத்தையும் ஆத்திரத்தையும் கொஞ்சம் தணிக்கலாம். இந்த வேலையைத்தான் சுயமரியாதை இயகம் இப்போது செய்கிறது. 'சீழ் கோர்த்துப் புரையேறிய புண்ணை அறுத்துச் சொஸ்தம் செய்யலாம். வலிக்குப்பயந்து வாளா இருந்தால் காலைக்குப்பெரிய ஆபத்துவரும்" என்றுடாக்டர் சொன்னால்நோயாளி கோபிப்பதுபுத்திசாலித்தனமாகாது. "ஜாதி இறுமாப்புகளை விட்டு எல்லோரும் மரியாதைக்குரியவர்கள் என்று கடந்து கொள்" என்ற சுயமரியாதைக்காரர் சொல்வதை மேல்ஜாதிக்காரர் இன்றுவிரும்வில்லை. ஆனால் விடுதலை பெற்றுவீறுகொண்டெழும் தாழ்த்தப்பட்ட மக்களின் பழங்கணக்குகள் பைசல்செய்யப்படுகின்ற அந்த நாளில் சுயமரியாதைக்காரர் சொல்வதெல்லாம் நியாயம் என்பதை மேல் ஜாதிக்காரர் உணர்வார்கள் அந்த நாளும் அதிதூரத்தில் இல்லை.

வினையின் விளைவு.

சரித்திரத்தில் எந்தக் குற்றமும், தண்டனையடையாது போகவில்லை. சீக்கியர்களின் 9வது குருதேஜ் பகதூரை ஔரங்கசீப் தூக்கி

லிட்டுக்கொன்று அவர் பிரேதத்தை டெல்லி நாற்சந்தியில் போடச் செய்தார். சுமார் இருநூறு வருஷங்கழித்து 1857ல் அதே டெல்லிக்குள் ஜயபேரிகை கொட்டிக்கொண்டு புகுந்த சிக்கியா, ஔரங்க சீப்பின் சந்ததியார்சனை தும்சம் செய்து மொகலாயசாம் ராஜ்யத்தை ஒழிதது இங்கிலீஷ் ராஜ்யம் நிலைபெறும்படி செய்து, தங்கள் 9வது குரு தேஜ்பகதூர் ஔரங்கசீப் சக்கரத்தியிடம் "ஔரங்கசீப், நான் உன்னுடையஅந்தப்புரதனைப்பார்த்துக்கொண்டு என் உப்பரிகையின் மீது நிற்கவில்லை. ஆனால் மேற்கேயிருந்து வந்து உன்னுடைய இராஜ்யத்தை அழிக்கப்போகிற இங்கிலீஷ்காரரைப்பார்த்துக்கொண்டு மேற்குப் பார்த்து நின்றிருந்தேன்" என்று சொன்ன தீர்க்கதரிசனத்தையும் மெய்ப்படுத்தினார்கள்.

ஆதி இந்துக்களின் பைசலாகாத பழங்கணக்குகள்.

தீண்டப்படாதவர்கள், காணப்படாதவர்கள், என்று சொல்லப்படும் இந்த தேசப்பூர்வ குடிகளுக்கு நாம் செய்துள்ள, இன்றும் செய்துவருகிற கொடுமைகள் கொஞ்சநஞ்சமல்ல. அவர்களுடைய பழங்கணக்குகளில் நமக்குத் தெரிந்தவைசில. கணக்குக்கு வராதவை பல.

உதாரணமாக இரண்டைக் குறிப்பிடுவோம். (1) காத்தான் என்ற பறையன், அப்பாபட்டர் மகள் ஆரியமாலையைக் காதலித்தான் ஆரியமாலையும் காத்தானைக் காதலித்தாள். காத்தான் ஆரியமாலையைச் சிறையெடுத்தான் (தாலிகட்டிக் கூட்டிக்கொணடு போய்விட்டான்.) ஜாதி கெட்டுப் போனதென்றும், ஆசாரங குலைந்ததென்றும் ஆறாயிரம் வேதியர்கள், ஆரியப் பூராஜனிடம் முறையிட்டார்கள். ஆரியப் பூராஜன், காத்தானைப் பிடித்துக் கழுவில் ஏற்றினான். (2) வீரன் என்ற சக்கிலியன் மதுரை மன்னன் மகள் வெள்ளையம்மாளையும், பொம்மியம்மாளையும் நேசித்தான். அரச குமாரிகளும் காவல்கார வீரனை நேசித்தனர். வீரன் அரசகுமாரிகள் இருவரையும் சிறையெடுத்துச் சென்றான் (கூட்டிக்கொண்டு போய்விட்டான்) விஷயம தெரிந்தவுடன், மதுரை நாயக்க மன்னன், வீரனைப் பிடித்து வரச்செய்து, அவனுடைய ஒரு கையையும் காலையும் வெட்டித் தண்டித்தான் (மறுகால் கை வாங்கினான்.)

மேற்படி இரண்டு சம்பவங்களையும் இந்தச் சமூகத்தவர்கள் மறந்துவிடவில்லை. சிதம்பரம் போய் தீக்குளித்துச் சிவனுடன் ஒன்றாய்க் கலந்த நந்தனாரைப்பற்றி நந்தனார் சமூகத்தவர்க்கு (படித்த சிலரைத் தவிர மற்றவர்களுக்கு) அநீகம் தெரியாது. ஆனால் ஆரியமாலையைச் சிறையெடுத்து அதற்காகக் கழுவிலேற்றப்பட்ட காத்தான், காத்தவராய சாமியாகி காத்தான் கூட்டத்தவராகிய ஆதிதிராவிடரால் தங்கள் குலதெய்வமென்று இன்றும் வணங்கப்பட்டு வருகிறான்.

அதுபோலவே அரசகுமாரிகள் டொம்மி, வெள்ளை இருவரையும் சிறையெடுத்து மாறுகை மாறு கால் வாங்கப்பட்ட வீரன், மதுரை வீரசாமியாகி வீரன் சந்ததியாராகிய சக்கிலியரால் தங்கள் குலதெய்வமென்று,

சேரிதோறும் கோவில் பெற்று வணங்கப்படுகிறான். காத்தவராயன் சரித்திரமும், மதுரைவீரன் சரித்திரமும், தமிழ் நாட்டில் உள்ள சேரிகளிலும், பாடிகளிலும் பாராட்டாய்ப் படிக்கப்பட்டும், பக்தியோடு கேட்கப்பட்டும் வருவதை இன்றைக்கும் பார்க்கலாம். இக்கதைகளின் சரித்திர உண்மையை உள்ளபடி உணர்ந்து கொள்ளும் காலமும் அதிக தூரத்தில் இல்லை.

இன்றைக்கு முடியுமா?

ஒரு ஆரியமாலையையோ, ஒரு வெள்ளையம்மாளையோ, பொம்மியம்மாளையோ, ஒரு காத்தானும், வீரனும் சிறையெடுப்பார்களானால், அதற்காக அவர்களைக் கழுவில் ஏற்றவோ மாறு கால் மாறு கை வாங்கவோ, இன்றைக்குத் தங்களால் முடியுமா என்பதை மேல் ஜாதிக்காரர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும். ஆனால் சமூக வாழ்க்கையில், இன்றையதினம் இம்மாதிரி காதற் சம்பவங்கள் நிகழ்வதில்லையா? ஆதிதிராவிட கோச்சிமன்களிடமும், குசினிக்காரனிடமும், சாபர்களிடமும் (மோட்டார் ஓட்டிகள்) மேல் ஜாதி எஜமான் வீட்டுப் பெண்கள் உறவு கொண்டாடுவதிலையா? மாட்டுக்காரர்களிடமும், தோட்டக்காரர்களிடமும் மிராஸ்தார் வீட்டுப பெண்கள் நட்புக்கொண்டு நடப்பதில்லையா? "கவுண்டனுக்குப் பிறந்தது கைத்தாளம் போடுது ஆண்டிக்குப் பிறந்தது அதிகாரம் செலுத்துது" என்று சிலதாசிகள் சொல்லும் பழமொழியே இதற்கு சான்றாகும். இந்தக் குற்றங்களுக்கு இங்கிலீஷ் சட்டத்தில் என்ன தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்றும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

எப்படிப் பார்த்தாலும், மனிதவர்க்கத்தின் மனத்தில் எழுந்துள்ள சுயமரியாதை உணர்ச்சியும், சமத்துவ தாகமும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றதேயொழிய, மேல் ஜாதிக்காரர் விரும்புகிறபடி, மறைந்துவிடும் என்றோ, அடங்கிவிடும் என்றோ நம்புவதற்கில்லை. சமத்துவ தாகங்கொண்டு கண் விழிப்புப் பெற்றுள்ள ஆதி இந்து சமூகம், தங்கள் பிறப்புரிமைகளை எவ்வளவு சீக்கிரத்தில், எப்படிப் பெறமுடியும் என்று ஆகதிரம் கொண்டு நிற்கிறது. மதத்தைவிட்டுப் போய்விடலாமாவென்கின்றனர் சிலர். இந்து மதத்தில் இருந்துகொண்டே போராடலாம் என்கின்றனர்சிலர். இந்து மத சாஸ்திரங்களைக்கொளுத்தி, விக்கிரகங்களை உடை என்கின்றனர் (ரஷிக்கில் செய்ததுபோல்) சிலர். இந்த நிலையில் உள்ள இவர்களை சுயராஜ்ய மந்திரத்தினாலோ, தேசபக்தி போதையினாலோ, இனியும் அடக்கிவிடமுடியும் என்று நினைப்பது ஏமாற்றத்தையே தரும். ஆசையால் பிரான்ஸிலும், ருஷ்யாவிலும் ஏற்பட்டதுபோல் பலாத்காரங்களும், வஞ்சந்தீர்த்தலும், இங்கும் ஏற்படாமல், நாளைக்கும் வரப்போகும் சமூக சமதர்மப்புரட்சியைச் சந்தோஷத்துடன் வரவேற்பதே புதிசாவித்தனமாகும்; அதற்காக மேல் ஜாதிக்காரர்கள் அக்கரையாக முயற்சியெடுத்துக்கொள்ளவும் வேண்டும். தங்களுடைய ஜாதிச்செறக்கையும், அகம்பாவம்கொண்ட பேச்சுக்களையும், எழுத்துக்களையும், அறவே விட்டுவிடவேண்டும்.

ஏற்கனவே தீர்க்கப்படவேண்டிய பழங்கணக்குகளை அதிகப்படுத்திக் கொளளக்கூடாது. ஒருவனுடைய ஜாதியையொட்டி குணங் கற்பிப்பதும், புத்தியின் அளவை மதிப்பதும், முகத்தின் தேஜஸைப் புகழ்வதும் முற்றிலும் நிறுத்தப்பட வேண்டும். அறிவும், திறமையும் ஜாதிவாரியாக ஏற்படுவதில்லையென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அறிவும் திறமையும் உள்ள ஒருவன் தன்னுடைய தகப்பனுக்குப் பிறக்கவில்லையென்று சொல்லப்படுவதை, எவனும் இந்தக் காலத்தில் விரும்பமாட்டான் என்பதையும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

மூடிந்து வைக்காதீர்கள்.

சமத்துவப்பசி கொண்டு ஆத்திரப்படும் 'கீழ் ஜாதிகள்' எனப்படும் சமூகத்தவர்க்கும் ஒரு வார்த்தை. அகம்பாவமும், பிடிவாதமும் கொண்ட மேல் ஜாதிக்காரர்கள் உங்களுக்கு நாள்தோறும் செய்துவரும் அக்கிரமங்களையும், கொடுமைகளையும், மனத்தில் போட்டுப் புழுங்கவேண்டாம். இருக்கடடும் ஒரு காணைக்கூப் பார்த்துக்கொளளலாம். வட்டி சேர்த்து சொங்கலாமென்று மூடிந்து வைக்கவும் வேண்டாம். எவ்வித அவமானத்தையும் பதில்பேசாது சகித்துக்கொண்டு போவதனால், அவமானஞ் செய்கிறவர்கள் தங்கள் குற்றத்தையுணர மார்க்கமில்லாமற் போய்விடுகிறது உங்களுடைய அதிர்ப்தியும், வெறுப்பும் உள்ளூர வளர்ந்து உட்பகை மூற்றிக்கொண்டே போகிறது. ஆகையால், எந்தெந்த சமயம், யாரால் எவ்விதமான அவமரியாதை, அக்கிரமம், கொடுமை ஏற்பட்டாலும் அதை அப்பொழுதே உங்கள் சமூகம் அனைத்தும் தெரியும்படி பகிரங்கப்படுத்தவேண்டும். உங்களுடைய அதிர்ப்தியையும், வெறுப்பையும் மற்றவர்களும் தெரிந்துகொள்ளும்படி விளம்பரப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் நீங்கள் சுயமரியாதையடையலாம். மற்றவர்களும் உங்களை மரியாதையுடன் நடத்தவேண்டிய அவசியத்தை உணர்வார்கள். இந்தக் கஷ்டமான வேலையில் உங்களுக்குத் தைரியமாக உதவி செய்யக் கூடியவர்கள், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் சுயமரியாதைச் சங்கத் தலைவர்களைத் தவிர வேறுஇல்லை. ஆத்திரத்தை வெளியிற் சொல்லி ஆற்றுங்கள். மூடிந்து வைத்துப்புழுங்க வேண்டாம்.

இவ்விஷயம் குடிஅரசில் வெளியிட்டிருந்தாலும் இது ஒரு முக்கிய ஆராய்ச்சி விஷயமானதால் புத்தக ரூபத்தில்இருக்கவேண்டுமென்றெபகுத் தறிவிலும் பிரசுரிக்கிறோம்.

மதப்பற்றுள்ள தோழர்களுக்கு ஒரு வார்த்தை.

(தோழர் கனகாராஜன், உடுமலை.)

நீங்கள் தர்க்கிப்பவனை உங்களுடைய விரோதி என்றும், விதண்டாவாதக்காரனென்றும், ஒழுக்கம், அன்பு அற்றவனென்றும், அகேக மூட நம்பிக்கைக்காரர்களாலும், மதப்பித்தர்களாலும் கற்பிக்கப்பட்டு ஒரு தப்பபிப்ராயம் கொண்டுவிட்டீர்கள். அதனால் இவ்வியாசத்தின் ஆரம்பத்திலேயே நான் எவ்வித வெறுப்புமின்றிச் சில வசனங்களை எழுதுகிறேன் என்பதையும், அவ்வாறு எழுதும் விஷயத்தைக் கவனித்து படிக்க வேண்டு மென்பதையும் முதன்மையாகத் தெரிவித்துக் கொள்வதுடன்; உங்களிடத்தில் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் பிரியப்படுகிறேன்.

அதாவது:- நான் சொல்லுவது தவறாயிருக்கலாமென்று நீங்கள் சந்தேகப்பட்டால் என்றாய் என் வசனங்களை ஆராய்ச்சி செய்து பார்க்கவும், என், எப்படி, என்ற வினாக்களை இடையிடையே தாராளமாய் உபயோகப் படுத்தவும் உங்களுக்கு பூர்ண உரிமையை நான் கொடுக்கிறேன். அதுபோல் நீங்கள் சொல்வதையும், உங்களுடைய மதங்களிலுள்ள வாக்கியங்களையும், நான் நடுநிலைமையிலிருந்து ஆராய எனக்குப் பூர்ண உரிமை அனுமதிக்க வேண்டும். இவ்வளவுதான் எனக்கு வேண்டுவது. இதுதான் நான் பணிவுடன் தங்களிடம் கோரும் ஒப்பந்தம்.

இதைத்தாராளமாக இளைஞர்கள் (எம்மதத்திலுள்ளவராயினும்) ஒப்புக்கொள்வார்கள் என்பது எனது அனுபவமும், நம்பிக்கையுமாகும். இதைப் பொதுப்பட யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

இந்த ஒப்பந்தம் நியாயமானது என்று அறிவீர்களானால், அதுவே எனக்குப் போதும். ஏனென்றால் இந்த நியாயமான ஒப்பந்தத்திற்கு இணங்காதவர்களிடமும், இணங்க முயலாதவர்களிடமும், சேர்மையில்லை என்பதைச் சாதாரணமாக நீங்களே ஒருவாறு அறியலாகும். மதப்பித்தர்கள் இவ்வொப்பந்தத்திற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது எனதுடைய அனுபவம். நான் இவ்வாறு சொல்வதில சந்தேகமிருந்தால் உடனே எந்த மதப்பித்தராயினும் சரி அவரிடம்

போய்ப்பேசிப் பாருங்கள். எடுத்த எடுப்பில் பெரிய அணை போட்டுவிடுவார்கள். அதாவது 'கம்பினால்தான் எல்லாமுண்டு. கம்பாவிட்டால் ஒன்றுமில்லை' என்பார்கள். "மனிதன் கடைத் தேறக் கடவுள் வேதத்தை சொல்லியிருக்கிறார். அதன்படி கடந்தால் மோட்சம் கிடைக்கும் நடக்காவிட்டால் நரகம் போய்ச்சேருவார்கள்" என்று தாராளமாகச் சொல்லிவிடுவார் கள். இதைப் பூர்ணமாய் கம்பிக்கொண்டுதான் வேதம் படிக்க வேண்டும்; ஒருவாறு எதோ ஒரு சக்தியிருப்பதாக வைத்துக் கொண்டாலும், அது வேதத்தைச் சொல்லிற்று என்பதற்கு என்ன ஆதாரம்? அன்றியும் ஓரே கடவுள்தான் என்றெல்லோ ரும் சொல்லுகிறார்கள். அந்த ஓரேகடவுள் ஒன்றுக்கொன்று முரண்பாடாயுள்ள பல வேதங்களை சொல்லியிருக்குமா? அவரே வேதத்தை எழுதிப்பூமியில் போட்டுவிட்டாரா? யாரா வது அவர் சொல்லச்சொல்ல எழுதிக் கொண்டார்களா? அல் லது அவர் என்னிடம் மாத்திரம் சொன்னார், அந்த விஷயங்க ளைத் தான் நான் வேதமாக எழுதினேன் என்று யாராவது சொன்னார்களா? தோழர், காந்தியார் சொல்லுகிற மாதிரி கடவுள் சொன்னார் என்று யாராவது ஒருத்தர் சொல்லியிருக் கலாம்; அதை யாவரும் கம்பி அதை வேதமாக ஏற்படுத்தியிருக்கவேண்டும் என்று தான் நினைக்கிறேன்; வேதம் கடவுள் சொன்னது என்பதற்குத் தகுந்த ஆதாரம் ஒன்றுமில்லை. யாருக்காவது தெரிந்திருக் தால் சொல்லுங்கள்; வேதம் கடவுளுடைய வாக்கு என்பதை ருபிக்கச்கூடியவர்களிருந்தால் அதைஒப்புக்கொண்டு, அணு வும் பிசகாது அதன்படி கடக்கச் சித்தமாயிருக்கிறேன். அதை விட்டு வேதங்களை கம்பவேண்டுமென்று எவரும் வற்புறுத்து வதில் பிரயோஜனமில்லை. இதுதான் முக்கியமான இடம். இந்த இடத்தில் நீங்கள் ஏமாறுவீர்களாகில் நீங்கள் சாகும் வரையும் குருட்டுத்தனமாக கம்பிக்கொண்டே போக வேண்டி யதுதான். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும், ஏன்செய் கிறோம், எதற்குச் செய்கிறோம் என்று உங்களுக்கே தெரி யாது. யாராவது ஏன்இம்மாதிரி செய்கிறீர்கள் என்றுகேட் டால் "எம் வேதத்தில் சொல்லியிருக்கிறது" என்பது தவிர, ஒன்றுமே உங்களுக்குப் புரியாது. அதனால் உங்கள் அறிவு வளர்ச்சியடைய மார்க்கமே இல்லை என்று உறுதியாகவும், சுருக்கமாகவும் சொல்லுகிறேன். இதைப் பெருஞ்சின்னிச்சிறு பத்திரிகை இடக்தராது என அஞ்சி முக்கியமாகமதபோதனை யின் நியாயமற்ற தன்மையை மாத்திரம் எடுத்துக்காட்டி இவ் வியாசத்தை முடித்துவிடுகிறேன்.

உதாரணமாக ஒருவன், மற்றொருவனிடம போய்த் தன் அபிப்பிராயத்தை நம்பினால், ஆயிரம் பொன் தருவதாகவும், நம்பாத பட்சத்தில் ஆயிரம் அடி சாட்டையால் அடிப்பேன் என்றும் சொல்லுகிறான் என்பதாக வைத்துக் கொள்வோம்.

இன்னொருவன், தன் அபிப்பிராயத்தைச்சொல்லி, மற்றவர்கள் தான் சொன்னவைகளை அப்படியே நம்பிவிட வேண்டாமென்றும், நடு நிலைமையிலிருந்து நன்றாய் யோசித்துப் பார்த்து, உண்மை என்று பட்டால் ஒப்புக்கொள், இல்லாவிடில் தள்ளிவிடு என்று சொல்லுவதாகவும் வைத்துக்கொள்வோம்.

இவ்விருவர்களில் யார் யோக்கியனாக விருக்க முடியும்? யாருடைய முறை ஒழுங்கானது? எது சன்மார்க்கம்? என்பதை நியாய புத்தியுடன் யோசித்து ஒரு முடிவுக்கு நீங்களே வாருங்கள். இதை முடிவு செய்துகொண்டு பின் கீழேனமுதியுள்ளதை வாசியுங்கள்.

முதல் உதாரணம் மத போதனையுடன் ஒப்பிட்டிருக்கிறேன். அப்படிதான் ஒப்பிட்டது சரியா தவறா என்பதையும் நீங்கள் படித்துப்பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள். வேதத்தை நம்பினால் மோட்சம் (ஆயிரம் பொன்) கிடைக்குமென்றும், நம்பாவிட்டால் நரகம் (ஆயிரம் அடி) என்றும் மதப்பிதற்கள் சொல்லுகிறார்களா? இல்லையா?

இரண்டாவது மனிதன் யார் என்று நினைக்கிறீர்கள்; பெயரைக் கேட்டு வெறுத்து விடாதீர்கள்; விஷயத்தை கவனியுங்கள்; அவன் தான் பகுத்தறிவு வாதி; ஏன் பச்சையாகவே சொல்லி விடுகிறேன். ஏனென்றால் நீங்கள் எல்லாம் படித்தாய்விட்டது. அவன் தான் சுயமரியாதைக்காரன். சுயமரியாதைக்கு அடிப்படை இதுதான். "காரணம் என்ன, எப்படி" என்று ஒருவன் கேட்கத்தொடங்கும் போதே, அவன் சுயமரியாதைக் காரனாய் விடுகிறான். அக்கேள்வி பிறக்க உடனே மதமும் இறக்கு விடுகிறது.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்? ...	...	ரூ.	0 5 0
பிராகிருதிவாதம் ...	...	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை	...	,,	0 5 0

Hon. பெர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	...	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த தீமையென்ன?	...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	...	,,	0 3 0
கடவுள் ...	...	,,	0 5 0
நான் சமூசயவாதியானதேன்?	...	,,	0 3 0
வால்ட்டேர் ...	...	,,	0 4 0

அறிஞர் பிரமச்சாரி M A., L. T , எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	...	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி ...	...	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	...	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B L , எழுதியவை.

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும்	I.ம் பாகம்		0 6 0
ஷை	II.ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மெஸ்லியர் எழுதியது.

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம்			0 4 0

தோழர் அ. திராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும் மதமும்	...	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் (''நான்காம் பதிப்பு'')	...	,,	0 5 0
ஷை காலிகம்கா பயிண்டு	...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. மி.)			0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்திய ரின் குறையாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம் (200 பக்கம்)	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிட்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம்பதிப்பு) (200 பக்கம்)	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா? (மூன்றாம் பதிப்பு)	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
14.	ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப்பாடல்	0	2	0
18.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
20.	பர்னர்ட்ஷா உபன்யாசம்	0	1	0
21.	சோஷியலிசம்	0	2	0
22.	போல்ஷிக் முறை	0	1	0
23.	ஈ. வெ. ரா: இலங்கை உபன்யாசம்	0	0	9
24.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
25.	சமதர்ம உபன்யாசம்	0	0	6
26.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
27.	மனுநீதி விளக்கம்	0	2	0
28.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
29	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
30	புதுராஷ்யா (200 பக்கம்)	0	8	0
31	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் (175 பக்கம்)	0	8	0

Edited Printed and Published by E. V. Krishnasamyat the Unmaivilakam Press, Erode.